# பாரதரத்னா இந்திரா



-கண சுபாஷ்சந்திரபோஸ்

மெய்கண்டான்
வெளியீடு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# "பாரதரத்ன இந்திரா"

கண. சுபாஷ் சந்திரபோஸ்

மெய்கண்டான் வெளியீடு
கொழும்பு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"பாரதரத்னா இந்திரா"

முதல் பதிப்பு 1985

மெய்கண்டான் வெளியீடு

பதிப்புரிமை வெளியீட்டாளருக்கே.

விலை ரூ. 15-00

அச்சுப்பதிவு :

மெய்கண்டான் அச்சகம்

இல. 161, செட்டியார் தெரு,
கொழும்பு-11.
இலங்கை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அமைச்சரின் ஆசியுரை

வீரகேசரி சிரேஷ்ட உதவியாசிரியர் திரு. கண சுபாஷ் சந்திரபோஸ் "இந்திராகாந்தி"யைப் பற்றி தமிழில் "பாரதரத்ன இந்திரா" என்ற நூலை எழுதியுள்ளார்.

நவயுகத்தலைவி, இளையபாரதத்தின் வாரிசு இந்திரா காந்தியைப் பற்றி தமிழில் ஒன்றல்ல, இரண்டல்ல பல நூல்கள் வெளிவரவேண்டும். ஏனென்றால் அவரை, அவரது அனைத்துலக சாதனையை மக்கள் அறியவேண்டியது மிக மிக அவசியமாகும்.

இந்திரா சுதந்திரப் போராட்டத்தில் பிறந்து, அதன் சகல அம்சங்களிலும் பரிணமித்து, அந்தப் போராட்டத்தின் ஒளிப்பிழம்பாக வெளிவந்தவர். ஒரு மாபெரும் யுகத்தை உருவாக்கிய பெருந்தலைவி. அவரைப்பற்றி இலகு தமிழில், ஆற்றொழுக்கு நடையில் மிகவும் தெளிவாக திரு. சுபாஷ் சந்திரபோஸ் இந் நூலை எழுதியுள்ளார்.

அணிசேரா இயக்கத் தலைவியாகவும், உலகத் தலைவர்களில் முதல் வரிசையில் வைத்துக் கருதப்படும் சிந்தனைச் சிற்பியாகவும் இந்தியப் பண்பாட்டின் உதாரணமாகவும், அவர் வாழ்ந்த காலத்தில் ஏற்பட்ட பல்வேறு நிகழ்ச்சிகளையும் உணர்ச்சி ததும்ப, நாவலைப் போன்று நூலை எழுதியிருக்கிறார் ஆசிரியர்.

பாரதப்பிரதமர் இந்திராவின் வீரம், எடுத்தகாரியத்தை முடிக்கும் திறன், சர்வதேச உறவுக்காக அன்னார் எடுத்துக் கொண்ட பலதரப்பட்ட நிலைப்பாடுகள், தேச விடுதலை, மனித நேயம், சமூக முன்னேற்றம், சர்வதேச புரிந்துணர்வு இவை போன்ற பல விடயங்களை ஆசிரியர் இச்சிறு நூலில் யாவரும் விளங்கத்தக்க வகையில் எழுதியுள்ளார்.

பாரதத்திற்கு தன்னை அர்ப்பணித்துக் கொண்ட இந்திரா, பாரத நாட்டின் வளர்ச்சிக்கு, முன்னேற்றத்திற்கு தன் மனதில் எது சரியெனப் பட்டதோ, அதைச் சாதிக்க எத்தியாகத்தையும் செய்யத் தயங்கவில்லை. எவரை எதிர்க்கவும் அவர் பின் வாங்கவில்லை.

இத்தகைய சிறப்புவாய்ந்த இந்திராகாந்தியை தமிழுலகுக்கு அளிக்கும் நூலாசிரியரைப் பாராட்டுகிறேன். அவர் பணி தொடர்ந்து வெற்றிபெற ஆசிக்கின்றேன்.

**சௌ. தொண்டமான்**
கிராமிய தொழிற்றுறை அமைச்சர்
இலங்கை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பதிப்புரை

அணிசேரா இயக்கத்தின் தலைவியாக, சமாதான தேவதையாக பாரதரத்னவாக ஆகிய ஜோதி பண்டித ஜவஹர்லால் நேருவின் வழித்தோன்றி அவரது மரபுகாத்த உத்தம புத்திரியாக திகழ்ந்தவர் அன்னை இந்திராகாந்தி. இந்திராவின் மறைவைமுன்னிட்டு கடந்த வருடம் **கொம்பனித்தெரு சைவ முன்னேற்றச் சங்கத்தார்** தலைநகரில் உள்ள சர்வ ஆலயங்கள் தோறும் **மோட்ச அர்ச்சனை** செய்ததுடன் முன்னாள் **இந்தியத் தூதுவர் திரு. எஸ். ஜே. எஸ். சத்வால்** அவர்களின் இல்லத்தில் ஓர் அஞ்சலிக் கூட்டத்தையும் கூட்டு வழிபாட்டையும் நடத்தினர். இந்த அரிய சந்தர்ப்பங்கள் கைகூடுவதற்கு மறைமுகமாக உழைத்தவர்தான் நண்பர் **சுபாஷ் சந்திரபோஸ்.**

கூட்டு வழிபாடு இனிது நிறைவேறி நாம் இருவரும் சற்று உரையாடிக்கொண்டிருக்கும் போதே **பாரத ரத்ன இந்திரா** (நூல்), பிறந்து விட்டாள்.

அன்று சுபாஷ் தனது ஆதங்கத்தை வெளியிட்ட போது நூல் செயலுருப் பெற என் இதயத்தில் கருவானது.

தனது ஆற்றல் மிகு எழுத்துக்களால் அன்னை இந்திராவின் வாழ்க்கை வரலாறு, வெளிநாட்டுக் கொள்கைகள் என்பனவற்றை ஆராய்ந்துள்ள சுபாஷ் சந்திரபோஸ் அவர்களின் இந்நூல் எமது தாய்த் திருநாடான இலங்கைக்குப் பெருமை தேடித்தரும் என்பதில் ஐயமில்லை.

உலகம் போற்றும் ஒரு **தலை**வியரான இந்திராவின் வாழ்க்கை வரலாற்றையும், வெளிநாட்டுக் கொள்கைகளையும் உள்ளடக்கிய தாக **"பாரத ரத்ன இந்திரா"** என்ற நூல் எமது முதல் வெளியீடாக அன்னை இந்திராகாந்தியின் முதலாண்டு நினைவை முன்னிட்டு வெளியிடுவதில் நான் பெருமையடைகிறேன்.

குறுகிய காலத்தினுள் மிகவும் துரிதமாகச் செயற்பட்டதால் ஆங்காங்கு அச்சுப்பிழைகள் தோன்றலாம். அவற்றை நிவர்த்தி செய்யும் திருத்திய **மறுபதிப்பு** விரைவில் வெளிவரவுள்ளது.

**இரத்தினசபாபதி**
**குமரகுருநாதன்**
**இயக்குநர்.**

**மெய்கண்டான் அச்சகம் லிமிட்.**
161, செட்டியார் தெரு,
**கொழும்பு - 11.**
இலங்கை.
19 - 10 - 1985.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அணிந்துரை

சென்னைப் பல்கலைக்கழகத்துத் தெற்கு தென் கிழக்காசியவியல், துறைத் தலைவர்

பேராசிரியர் வி. சூரியநாராயணன் எம். ஏ., பீ. எச். டி. அளித்தது

மறைந்த பாரதப்பிரதமர் திருமதி இந்திரா காந்தியின் வாழ்க்கை வரலாற்றை இலங்கைவாழ் தமிழர் அருமையாகப் படம் பிடித்து காட்டியிருக்கிறார் இந்த நூலில். இந்தியர் அல்லாத ஒருவர் திருமதி இந்திரா காந்தியின் வாழ்க்கையை வியந்து எழுதியிருப்பது, அவர் ஒரு உலகத் தலைவி என்பதை உறுதிப்படுத்துகிறது.

ஆசிய ஜோதி ஜவஹர்லால் நேருவிற்கு மகளாக பிறந்து நேரு வாழ்ந்த யுகத்திலே அவரது நிழல்போல் வாழ்ந்து அவரது, ஆழ்ந்த அரசியல் திறனையும், பரந்த உலகியல் அறிவையும் பெற்று இந்திய நாட்டை வெற்றிப் பாதையில் அழைத்துச் சென்ற பெருமை இந்த அம்மையாரைச் சாரும்.

நேருவின் நெடுநாளைய ஆட்சிக்குப் பின்னர் மிகக் குறுகிய காலத்திற்குட்பட்ட சாஸ்திரியின் பிரச்சினைகள் மிகுந்த ஆட்சி ஏற்பட்டு இந்தியாவின் எதிர்காலத்தைப் பற்றிய ஐயம் தோன்றிய போது இந்த நாட்டில் ஒரு ஸ்திரமான வலுவுள்ள ஆட்சியை அமைத்து, விரைவிலேயே வங்காளதேசப் போரில் வரலாறு காணாத வகையில் வெற்றி கண்டு வீறுநடை கொண்ட சிங்கத் திருநாடாக மாற்றிய பெருமை திருமதி இந்திரா காந்தியையே சாரும்.

இன்று உலக அரசிங்கில் இந்தியா பீடுநடை போடுகிற தென்றால் அதற்கு முழுக்க பொறுப்பானவர் திருமதி இந்திரா காந்தியே.

இந்த நூல் திருமதி இந்திரா காந்தியின் அயல்நாட்டுக் கொள்கைகளையும், சாதனைகளையும் பின்னணியாகக் கொண்டுள்ளது. அண்டை நாடுகளோடு நேசத்தை வளர்ப்பதில் திருமதி இந்திரா காந்தி காட்டிய அக்கறை மிகவும் போற்றத்தக்கது. நேபாளம், பூடான் போன்ற நாடுகளோடு உள்ள இணக்கத்தை மேலும் மிகுதிப்படுத்த அவர் மேற்கொண்ட முயற்சிகள் நினைவில் கொள்ள வேண்டியவை.

இலங்கைக்கு அவர் அளித்த சலுகைக்கும், அதனால் இலங்கையில் நேசக்காரத்தைப் பற்ற அவர் மேற்கொண்ட முயற்சிகளும் குறிப்பிடத் தக்கவை. கச்சத்தீவை இலங்கைக்கு அளித்து, "" சிரிமாவோ — சாஸ்திரி"" ஒப்பந்தத்திற்கு புத்துயிர் அளித்து

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலங்கையின் நேசத்தை வளர்ப்பதில் அவர் காட்டிய ஆர்வம் மிகவும் பாராட்டுதற்குரியதாகும். 1983-ல் இலங்கையில் கலவரமும், வன்முறையும் நடந்தபொழுது, அந்த நாட்டின் சுதந்திரத்தில் தலையிடாமல் அங்கே அமைதி நிலவுவதற்காக வழிவகைகள் வகுக்க திருமதி இந்திரா காந்தி பாடுபட்டது மறக்க முடியாதது.

வங்காள தேசப் போருக்குப் பிறகு பாகிஸ்தானுடன் "சிம்லா" ஒப்பந்தத்தை செய்து கொண்டு, இரு நாடுகளிடையே உள்ள உறவு மேலும் கெடாமலும், மேலும் போர் மூளாமலும் இருக்க திருமதி இந்திரா காந்தி மேற்கொண்ட முயற்சிகள் அளவிடற்கரியன.

இதே போன்று வல்லரசுகளுடன் சுமுகமான நேசத்தை வளர்த்துக்கொள்ளவும் ரஷ்யா காலத்தினால் செய்த உதவிகளை மறக்காமலும், அதே நேரத்தில் அமெரிக்காவுடன் பகை கொள்ளாமலும் இருக்க அவர் மேற்கொண்ட முயற்சிகள் மெச்சத் தக்கவை.

திருமதி இந்திரா காந்தி கூட்டுச்சேரா நாடுகள் இயக்கத்திலும், காமென்வெல்த் இயக்கத்திலும் பெற்ற புகழ் நினைவில் கூறுவதற்குரியது. கூட்டுச் சேரா நாடுகளின் தலைவியாக இருந்து இந்தியாவிற்கு மட்டுமல்லாது, அந்த இயக்கத்திற்கே பெருமை தேடித் தந்தார் திருமதி இந்திரா காந்தி.

ஆசிய விளையாட்டுக்களை மிகச் சிறந்த முறையிலே ஏற்பாடு செய்து "ஒலிம்பிக்" விளையாட்டுகளுக்குச் சமமான தரத்தை ஏற்படுத்தி உலக மக்கள் வியக்கும் வண்ணம் நடத்திக் காட்டிய பெருமையும் இவரையே சாரும்.

இந்திரா காந்தியின் சாதனை இந்திய நாட்டின் வரம்பிற்கு பட்டது அன்று. அது உலகமெங்கும் பரவி எந்நாட்டவரும் அவரை நினைவுகூரும் ஒரு பெருமை மிக்க வாழ்க்கை அவரது வாழ்க்கை. அவரை ஒரு உலகத் தலைவியாகக் காட்டும் முயற்சியிலே ஆசிரியர் வெகுவாக வெற்றி பெற்றிருக்கிறார்.

அயல் நாட்டவர் ஒருவர் பிறநாட்டுத் தலைவரைப் போற்றி எழுதினால் அதிலே சுயநலம், கட்சிக் காழ்ப்பு போன்றவை கலப்பில்லாமல் இருக்கும் என்பது தெளிவு. **திரு: கண. சுபாஷ் சந்திரபோஸ் ஸின்** இந்த நூல் இந்தியாவிற்கே புகழ் தேடித்தரும் நூல். அவருக்கு எமது வாழ்த்துக்களும், பாராட்டுகளும் உரித்தாகுக.

**பேராசிரியர் வி. சூரியநாராயணன் M. A. P. HD.**

பெசன்ட் நகர்
சென்னை—6.

சென்னை பல்கலைக்கழகத்துத் தெற்கு-
தென்கிழக்காசியவியல் துறைத் தலைவர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழ்த்துரை

**வீரகேசரி பிரதம ஆசிரியர் ஆ. சிவநேசச் செல்வன் (எம்.ஏ.எம்.எஸ்.ஸி.)**

உலக அரசியல் அரங்கிலிருந்து பொது வாகவும், மூன்றாவது உலகநாடுகளின் பின்னணியிலிருந்து சிறப்பாகவும் பாரதப் பிரதமர் இந்திராகாந்தி குரூரமாக அகற்றப்பட்டமை இந்திய அரசியற் கொதிப்புகளின் விளைவாகத் தோன்றிய வரலாற்றின் சாபக்கேடு. நிகழ்கால அரசியல் வரலாற்றிலே அன்னை இந்திரா பாரதத் தலைவியாக உயர்ந்தமை கூட தற்செயல் நிகழ்சியல்ல. அது ஒரு நீண்ட அரசியற் பாரம்பரியத்தின் வளர்ச்சியும், தொடர்ச்சியுமாகவே அமைந்தது. எவ்வாறாயினும் காலவெள்ளத்தால் இலேசாக ஒதுக்கமுடியாத அழியாச் சுவடுகளை அன்னை இந்திராவின் நினைவுகள் மனித மனங்களில் பதித்துச் சென்றுள்ளன.

இந்திராகாந்தியின் ஆளுமை ஏற்படுத்திய சர்வ வியாபகமும், திடீரென ஏற்பட்ட கோரக்கொலையும் அனைத்துலகத்தையே அசைத்தமைக்கு அப்பால் இலங்கை வாழ் தமிழ்பேசும் மக்களின் உயிர்ப்பையே ஈடாட வைத்துள்ளது என்ற உணர்வு பல்வேறு வகைகளில் வெளிப்பட்டமை யாவரும் அறிந்ததே. ஒருவகையில் தமிழ்பேசும் மக்கள் தமது மூலவிசையையே இழந்து நிலை தளம்பியமையையும் உணர்ந்து கொண்டனர்.

அனுதாபக் கூட்டங்கள், அஞ்சலிகள் என்ற வகையிலான "கையறுநிலைகளுக்கு", ஒரு படி மேலாக அத்தியந்த உறவுடன் இந்திராவை நினைவுபடுத்தும் வேகமும் இங்கு தொடரலாயிற்று. இதன் எதிரொலியை நாம் கடந்த காலங்களின் வெகுஜன தொடர்பு சாதனங்களின் பின்னணியிலும் பொதுவாகவும் உணர்ந்து வருகிறேம். இந்த வகைப் போக்கின் வெளிப்பாடாக "பாரத ரத்ன இந்திரா" என்ற இந்த நூல் வெளிவருகிறது என்றே தோன்றுகின்றது. பல்வேறு நிலைகளிலே உலக அரங்கில் நசுக்கப்பட்டவர்களின் குரலாகத், ஒலித்தது மட்டுமன்றி இந்தியாவையே அவர்களின் எழுச்சிக்காகப் பாரிய பங்களிப்புகள் செய்ய வைத்ததை உலக சமுதாயம் மறந்து விடமுடியாது. இந்த அடிப்படை உண்மையை மனமார உணர்ந்தமையாற் போலும், இந்நூலாசிரியர் கருத்துக்களை ஒருவகையான தர்மாவேசத்துடன் "சரடாகச்" சேர்க்க முற்பட்டுள்ளார்.

நீண்டகாலமாக, "வீரகேசரி" வாசகர்களுக்கு உலக விவகாரங்களை சுருக்கமாகவும், அழகாகவும் நறுக்குத் தெறித்தாற் போல வழங்கி வருபவர் கண. சுபாஷ் சந்திரபோஸ். நான் பல்கலைகழகத்தில் பணியாற்றியபோது உலக விவகாரங்களைப் பயிலும் பல மாணவர்கள் மத்தியில் சுபாஷின் கருத்துக்கள் விமர்சிக்கப்படமையைக் காதாரக் கேட்டுள்ளேன். அதன்பின்னர் பத்திரிகைப் பணியைத் தொடர்ந்தபோது அவரின் கருத்துப் போக்குக்களை அவ்வப்போது கடுமையாக விமர்சித்தும் உள்ளேன். பல்வேறு சந்தர்ப்பங்களில் வாசகர்களும், இவர் கருத்துக்கள் பற்றிய

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கருத்துக்களை எழுத்திலும், வாய் மூலமாகவும் கூறியமையும் மேலும் எமது பரிட்சியத்தை வலுவாக்கியது. இந்த நிலையில் மனதில்பட்ட யாவற்றையுமின்றி, ஒரு சிலவற்றைத் தொட்டுக் காட்டுவதும் இன்றியமையாததே.

வாழ்க்கை வரலாற்று நூல்கள் மனிதனின் வாழ்க்கையை போலப் பல்வேறு விதமானவை. இதை வாழ்க்கை வரலாறுகளைப் பயில்வோர் நன்கு அறிவர். இந்த நூலை வெறுமனே வாழ்க்கை வரலாற்று நூலாக மட்டும் கருதிவிட முடியாது. அனைத்துலக அரங்கில் இந்தியா வகித்துவரும் நிலையை இந்திராகாந்தியினூடகத் தொட்டுக்காட்டும் தொகுப்பு நூலாகவே இதனைக் குறிப்பிடலாம். இந்திராவின் மூலம் இந்தியாவையும், இந்தியாவின் மூலம் இந்திராவையும் தரிசிக்கும் நிறைவை இங்கு ஆசிரியர் பெற்றுள்ளார். அதனைப் பகிர்ந்துகொள்ள விழைகிறார். ஆயினும் சற்று உணர்வு பூர்வமாக வேகத்துடன் நிகழ்வுகளைக் கூறமுற்பட்டமை இந்திரா வகித்த வரலாற்றுப் பாத்திரத்தின் ஒரு பகுதியையே காட்டுவதாக உள்ளமையையும் கூறாமல் விட முடியாது.

பத்திரிகைக் கட்டுரை நடையிலே சரளமாக நூலை ஆசிரியர் வளர்த்துச் சென்றுள்ளார். ஒரு மூச்சிலேயே படித்துவிடக்கூடியதாக உள்ளமை இந்நூலின் சிறப்பியல்புகளில் ஒன்று. ஆயினும் நூலாசிரியர் கையாண்டுள்ள பருந்துப் பார்வைப் போக்கும், ஆங்காங்கு கூறும் அவசரக் குறிப்புக்களும் இந்திராகாந்தியின் பலத்தை மட்டுமே நன்கு இனம் காட்டுவதாக உள்ளது. எவ்வாறாயினும் சகல அம்சங்களையும் வெறுமனே உருப்போடும் ஆர்வத்துடன் நூலை வளர்க்க முற்பட்டமை தவிர்க்கப்பட்டும் போதிய நுணுக்க விவரக் குறிப்புடன் ஆழமாக ஆங்காங்கு அலசப்படாமை இந்திரா காந்தியின் பக்தராகவே ஆசிரியரை மாற்றியுள்ளது.

ஆரவாரமின்றி அடக்கமாகப் பணிபுரியும் கர்மயோகியாக செயற்பட்டு வருபவர் கண. சுபாஸ் சந்திரபோஸ். பல்வேறு அவசரங்களின் மத்தியில் வாழ்ந்துவரும் பத்திரிகையாளர்கள் நேரத்துடன் போராடுவது இயல்பு. பத்திரிகைத்துறை மாயைகளுக்கு மத்தியிலே நிரம்பிய உறுதியுடன் நிதானமாக வளர்ந்து வரும் இந்நூலாசிரியர் பத்திரிகை உலகிற்கு அணிசேர்க்கக்கூடிய வகையில் பணிபுரிவார் என்பதற்கு ஆதார இலக்கியமாக இந் நூல் வெளிவருகிறது.

"பாரத ரத்ன இந்திரா" நூலாசிரியரின் கன்னிப்படைப்பு. இதன் மூலம் வெளியரங்குக்கு மேலும் அறிமுகமாகும் இவருடைய பார்வைகளும், மதிப்பீடுகளும் மேலும் ஆழமாக வேண்டும். இவரது ஆர்வமும், பணிகளும் சிறந்து தமிழ்கூறும் நல்லுலகத்திற்கு அணிசெய்யும் பணி தொடர்க என வாழ்த்துவோமாக.

24, விக்லி அவெனியூ.
வெள்ளவத்தை
1 .1 .1985

ஆ. சிவநேசச்செல்வன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சமர்ப்பணம்

என் அன்புத் தந்தையார் ஸ்ரீமான் கணபதி வன்னியப்பிள்ளை, தாயார் கற்பகம் ஆகியோருக்கு இந்நூலை சமர்ப்பணம் செய்கிறேன்.

கண. சுபாஷ் சந்திரபோஸ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முகவுரை

பாரதப்பிரதமர் மறைந்த ஸ்ரீமதி இந்திராகாந்தி உலகத் தலைவர்களின் வரிசையில் போற்றப்பெறுபவர். அவரது தலைமைத் துவத்தில் பாரதம் உலக அரங்கில் வியத்தகு சாதனைகளையும், பெருமைகளையும் எட்டிப்பிடித்திருக்கிறது. "ஆக்கபூர்வமான நடுநிலைமையே" பாரதத்தின் அயலுறவுக் கொள்கை என்று உலக அரங்கில் வலியுறுத்தி வந்தவர் மறைந்த இந்திராகாந்தி. அரசியல், பொருளாதாரம், பாதுகாப்பு மற்றும் சமூக அபிவிருத் தித்துறைகளில் நாட்டை முன்னேற்றப்பாதையில் கொண்டு சென்ற பெருமை அவருக்குண்டு. மறைந்த பிரதமர் காந்தி பாரத மக்களின் குறிப்பாக கடல் கடந்து வாழும் பாரத இனத் தவர்களின் நெஞ்சங்களில் வாழ்ந்து வருகிறார். அந்தவகையில் அவர் மறைந்து ஓராண்டு நெருங்கியுள்ள இவ்வேளையில் அவருக்கு அஞ்சலியாக "பாரதரத்ன இந்திரா" என்ற இந்நூல் வெளியிடப் படுகிறது.

புகழ்மிக்க வீரத்தலைவியின் வாழ்க்கை வரலாற்றையும், சர்வ தேச அரங்கில் அவர் கடைப்பிடித்த ஜீவசக்திமிக்க அயலுறவுக் கொள்கைகளையும் இந்த நூலில் வெளிக்காட்டுவதற்கு கிடைத்த சந்தர்ப்பத்தைப் பெரும் பேறுகக் கருதுகின்றேன். பாரதத் திருமகளின் மனித நேயப்பணியை நினைவுகூர்ந்து அவருக்கு அஞ்ச லியாக நூல் வெளியிடவேண்டும் என்று எனது மனதில் உதித்த ஆவலை செயலுருவில் நிறைவேற்றியவர் எனது அருமை நண்பரும் அச்சகத்துறையின் முன்னேடியுமான **மெய்கண்டான் இயக்குநர் இ. குமரகுருநாதன்** அவர்கள். எனது கன்னி முயற்சியாக இந்த நூலை வெளியிடுவதில் அவர் கொடுத்த ஒத்துழைப்பையும், ஆதரவையும் என் வாழ்வில் எளிதில் மறக்கமுடியாது.

வெறுமனே புகழ்மிக்க தலைவியின் வாழ்க்கை வரலாற்றை சித்தரிப்பதுடன் அமையாது அயலநாடுகளுடனும், குறிப்பாக அமெரிக்க—சோவியத் வல்லரசுகளுடனும இந்தியாவின் உறவு எவ்வாறு அமைந்திருந்தது என்பதை இந்நூலில் குறிப்பிட சந்தர்ப் பம் கிடைத்ததுள்ளது. அந்தவகையில இந்தியாவின் அயல்நாட் டுக்கொள்கை சம்பந்தமான இந்திய இராஜ தந்திரிகளின் பெறுமதி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மிக்க நூல்களை வாசித்துப்பயனடையவும் தேவையானபடங்களையும வழங்கியவர் இந்திய தூதரகத்தின் முதலாவது செயலாளர் **ஸ்ரீமதி லக்ஷ்மிபூரி** தகவல் பிரிவைச் சேர்ந்த அவரது உதவியாளர் **திரு. கே. அசோகன்** ஆகியோராவர். அவர்களுக்கு எனது மனமார்ந்த நன்றி உரித்தாகட்டும்.

என்னுடைய இந்தப் பணியை ஓயவிடாது ஊக்குவித்து வந்த எனது அருமைத் தம்பிகளான கண. கருணாகரன், கண. இரவீந்திரன் ஆகியோருக்கும் நன்றி கூறக் கடமைப்பட்டுள்ளேன்.

இவை அனைத்திற்கும் மேலாக "பாரத ரத்ன இந்திரா" என்ற என்னுடைய இந்நூலுக்கு அணிந்துரை வழங்கிய மாண்புமிகு அமைச்சர் **திரு. சௌ. தொண்டமான்,** சென்னைப் பல்கலைக்கழக தெற்காசியவியல் துறைத்தலைவரும், அரசியல் பேராசிரியருமான **வி. சூரியநாராயணன்** எம். ஏ. பி. எச். டி, எனது ஆசிரியர் **திரு. ஆ. சிவநேசச்செல்வன்** எம். ஏ. எம். எஸ். ஸி. ஆகியோருக்கும் எனது கன்னிமுயற்சி வெற்றியடைய ஒத்துழைத்த அனைவருக்கும எனது நன்றிகள் உரித்தாகுக.

முதல்படைப்பான இந்நூலில் குற்றம்குறைகள் இருப்பின் பெரியோர்கள் அவற்றைப் பொருட்படுத்தமாட்டார்கள் என்ற நம்பிக்கை எனக்குண்டு.

அன்பன்.

**கண. சுபாஷ் சந்திரபோஸ்**

77, வன்றியன் வீதி,
கொழும்பு 13,
இலங்கை,
19.10.1985.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாரதரத்ன இந்திரா

இமயம் வரை உயர்ந்திருந்த இந்தியாவின் புகழை இன்னும் ஒரு படி மேலாக விண்வெளிவரை உயர்த்தி வைத்த பெருமை பாரதத் திருமகள் மறைந்த பிரதமர் திருமதி. இந்திரா காந்திக்கே உரியது.

ஏகாதிபத்தியம், காலனியாதிக்கம், இனவெறி ஆகியவற்றிற்கு எதிராகவும், இந்தியாவின் தேச சுதந்திரம், பொருளாதார, சமுதாய முன்னேற்றத்துக்காகவும் தமது வாழ் நாள் முழுவதையும் அர்ப்பணித்த ஒரு ராஜ்ய நிபுணரே இந்திரா காந்தி. அரசியல் அரங்கில் பிரகாசித்த பலர் தமது புகழை இழந்து விட்டார்கள். ஆனல் திருமதி இந்திரா காந்தி அப்படியல்ல. இந்தியாவின் தவப்புதல்வி. ஈடு இணையற்ற தலைவர். தேச விடுதலை, சமூக முன்னேற்றம் போன்ற விழுமிய கருத்துக்களின் தலை சிறந்த ஆதரவாளர் என்ற முறையில் அவரது புகழ் என்றும் மங்காது மறையாது ஒளி வீசி வளருகிறது.

உலகம் நம் காலத்தில் ஓர் ஒப்பற்ற பொது வாழ்வுப் பிரமுகரும், ராஜ்யநிபுணருமான இந்தியப் பிரதமர் திருமதி காந்தியை இழந்து விட்டது. இந்திய மக்கள் தமது தலைசிறந்த தலைவியை இழந்து விட்டார்கள். திருமதி காந்தி முதலில் தமது நாட்டை காலனியாட்சியின் அடிமைத்தனத்திலிருந்து மீட்பதற்கான போராட்டத்துக்கு தம்மை அர்ப்பணித்துக் கொண்டார். பின்னர் ஒரு புதிய சுதந்திர இந்தியாவை நிர்மாணிக்க பாடுபட்டார். பின்னர் மனிதகுலத்தின் நலிவுபோக்க கூட்டுச்சேரா இயக்கத்தின் தலைமைத்துவப் பொறுப்பை ஏற்றார். அந்தப் பணியில் செல்வாக்கும் பெற்றார்.

சமாதானத்துக்காகவும், புதிதாக விடுதலையடைந்த நாடுகளின் பொருளாதார, சமூகவிடுதலைக்காகவும் முன்பின் முரணின்றி போராடிய ஒரு வீராங்கனை திருமதி காந்தி. இருபதாம் நூற்றண்டு இந்தியாவின் மாபெரும் பிரதமர்களாக விளங்கியவர்கள் ஆசியஜோதி நேரு, அண்ணல் மகாத்மாகாந்தி ஆகியோர். அப்படிப்பட்டவர்களது நேரடியான சக்தி மிக்க செல்வாக்கால் விழிப்படைந்த பொதுவாழ்வுப் பிரமுகர்கள், அரசியல் தலைவர்களது தலைமுறை யைச் சேர்ந்தவர் திருமதி இந்திரா காந்தி. இதனலேயே அவரது மாபெரும் தந்தை உருவாக்கித் தந்த, "" நேரு கொள்கை வழி "" எனப் பெயர் பெற்ற இந்தியாவின் உள்துறை, அயல்துறைக் கொள்கைகளை பிரதமர் என்ற ரீதியில் திருமதி காந்தியால் கடைப்பிடிக்க முடிந்தது. அதனலேயே அவர் உலக அரங்கில் சிறந்த தலைவராக பிற்காலத்தில் மதிக்கப்பட்டார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விவேகிகளுக்குச் சொந்தமான கலை அரசியல். அந்தக் கலையில் பாண்டித்தியம் பெற்ற வித்தகி பாரதத் திருமகள் இந்திரா காந்தி. அத்தகைய வித்தகியை இராஜ தந்திர நிகழ்வுகளில் உலகத்தலைவர்கள் வென்றதற்கான சான்றுகள் இதுவரை இல்லை. அந்த திருமகள் வாழ்ந்ததால் பாரத மண் பெருமையடைகிறது. இந்த நூற்றாண்டில் அவர் வாழ்ந்திருப்பதால் சிந்தனைத் தெளிவுடைய உலக சமுதாயம் இறுமாப்படைகிறது. மூன்றும் உலக நாடுகளின் அரசியலும் நாகரீகம் அடைந்துள்ளது.

மாபெரும் வரலாற்றுபெருமையுடைய சோவியத் புரட்சி 1917 ஆம் ஆண்டு அக்டோபரில் இடம் பெற்றது. இன்றைய சோவியத் யூனியனின் வளர்ச்சிக்கு அந்தப் புரட்சியே காரணம். தேசபக்த தலைவி இந்திராவின் ஜனனமும் அதே புரட்சி ஆண்டில் நவம்பர் 19 ஆம் திகதியே இடம் பெற்றது. புரட்சியின் அடிவமாக உதித்த இந்திராவினால் இந்தியா பிற்காலத்தில் எத்தனையோ சாதனைகளை அடைந்துவிட்டது. காஷ்மீர் பிராமண குலத்தில் அலகபாத் நகரில் பண்டித ஜவஹர்லால் நேருவுக்கு ஒரே மகளாகப் பிறந்தவர், இந்திரா பிரியதர்ஷினி ஆரம்பக் கல்வியை பூனாவிலும், பம்பாயிலும், விஷ்வபாரதி சாந்திநிகேதனிலும் மேற்கொண்டார். சுவிட்சலாந்து ஜெனிவா மக்கள் கல்லூரியிலும், ஒக்ஸ்போர்ட் பல்கலைக்கழகத்திலும் உயர்கல்வி கற்றார்.

## வெளிநாட்டுப் பொருட்கள் தீயிடப்பட்டன

அலகபாத் ஆனந்தபவனத்தில் வாழ்ந்து வந்த காலப்பகுதியில் 1920 ஆம் ஆண்டு சிறுமி இந்திராவுக்கு மூன்று வயது.

"" பாரத மாதாவுக்கு ஜே ""
மகாத்மா காந்திக்கு ஜே ""

இந்து, முஸ்லிம் ஒற்றுமை ஓங்குக "" என்ற முழக்கங்கள் சிறுமி இந்திராவின் காதுகளில் ரீங்காரம் செய்யும். வெளிநாட்டு மோகத்தை தணிக்க விரும்பிய அண்ணல் மகாத்மாகாந்தி வெளிநாட்டுத் துணிகளை எரிக்குமாறு வேண்டுகோள் விடுத்தார். பாரத நாட்டில் நெய்யப்படும் உடைகளையே அணியவேண்டுமென்று அண்ணல் காந்தி கட்டளையிட்டார். இந்த வேண்டுகோளை மக்கள் ஆர்வமுடன் ஏற்றார்கள். பலர் தமது வெளிநாட்டுப் பொருட்களை தீயிட்டு கொழுத்தினார்கள். இதைக் கண்ட ஆங்கிலேய அரசு மனம் கொதித்தது. ஆத்திரம் அடைந்தது. மக்களை சிறைப்படுத்தியது என்றாலும் காங்கிரஸ் தலைவர்களும், தொண்டர்களும் மனம் தளரவில்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்திராவின் வீட்டிலும் வெளிநாட்டுப் பொருட்கள் ஏராள மாக இருந்தன. மோதிலால் நேரு ஆடம்பரமாக வாழ்ந்து வந்த செல்வந்தர். அவரது புதல்வர் ஜவஹர்லால் நேருவும் இங்கி லாந்தில் கல்வி கற்றவர். ஆகையால் அவர்களிடம் வெளி நாட்டுப் பொருட்கள் ஏராளமாக இருந்தன. அண்ணல் காந்தி யின் கட்டளையை ஏற்று மோதிலால் நேருவும், அவரது புதல்வர் ஜவஹர்லால் நேருவும் வெளிநாட்டுப் பொருட்களின் மீது வெறுப் புக் கொண்டு அவற்றை தீயிட்டு அழிக்க முடிவு செய்தனர்.

## இந்திராவின் விடுதலை உணர்வு

ஆனந்தபவனத்தின் தோட்டத்தில் நெருப்பு வளர்க்கப்பட் டது. வெளிநாட்டில் வாங்கிவரப்பட்ட புடவைகளும், பொருட் களும் தீயிடப்பட்டன. அறிவை வளர்க்கும் நூல்களை தவிர்ந்த வேறு அனைத்து வெளிநாட்டுப் பொருட்களையும் ஜவஹர்லால் நேரு நெருப்பில் வீசிக் கொண்டிருந்தார். தீ சுடர் விட்டுப் பிரகாசித்தது. பாரதத் திருநாட்டின் விடுதலை வேள்வித் தீயைப் போன்று அது ஒளி வீசியது. விடுதலை உணர்வைப் போன்று நெருப்புப் பொறிகள் எழுந்தன. அதனைக்கண்ட சிறுமி இந்தி ராவின் இதயத்திலும் விடுதலைத் தீ கொழுந்து விட்டது.

தந்தை ஜவஹர்லால் நேருவும், தாத்தா மோதிலால் நேருவும் அடிக்கடி சிறை சென்று கொண்டிருந்ததால் இளமையிலேயே அடிக்கடி பாடசாலைகள் மாறவேண்டிய சூழ்நிலை சிறுமி இந்திரா வுக்கு இருந்தது. ஆனந்தபவனம் சிறுமி இந்திராவிற்கு ஓர் அருங் கலைக்கூடமாகவே இருந்தது. வீட்டில் தந்தையின் அறையிலி, ருந்த நூல்கள் இந்திராவைக் கவர்ந்தன. இளமைப் பருவத்தி லேயே நிறையப் படிக்கும் ஆர்வம் ஏற்பட்டது. சேக்ஸ்பியர், மில்டன், பேர்னாட்சா, டால்ஸ்டாய் ஆகியோர் எழுதிய நூல்களை சிறுமி இந்திரா விரும்பிப் படித்தார். ஓயாமல் படித்து புத்தகப் புழுவாகவே அவர் மாறிவிட்டார்.

"" ஜோன் ஆப் ஆர்க்"" என்ற வீரமிகு பிரஞ்சு வீராங்கனை யின் வரலாறு சிறுமி இந்திராவின் மனதில் ஆழமாகப் பதியத் தொடங்கியது. ,,,, ,,
இந்த தியாகத் திருமகள் தாய் நாட்டின் விடுதலைக்காக வீரப் போர் புரிந்த உயிர்த் தியாகி. நாட்டுப் பற்றும் வீரமும் சுடர் விட்டு ஒளிவீசிய ஜோன் ஆப் ஆர்க்கின் நூல் இந்திராவின் உள் ளத்தில் புத்துணர்வை ஏற்படுத்தியது. இளம் நெஞ்சத்தில் வள மான எண்ணம் வழிந்தோடியது. வெள்ளையரை பாரத மண்ணி லிருந்தே விரட்ட வேண்டும் அதன் மூலம் பாரத நாட்டில் பிரெஞ்சு வீராங்கனையைப் போன்று திகழ வேண்டும் என்ற ப்வல் சிறுமி இந்திராவின் மனதில் பொங்கி எழுந்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வீராங்கனையாக விரும்பியவர்

பாடசாலையில் ஒருநாள் இந்திராவிடம் நீ எதிர்காலத்தில் எவ்வாறு மாறிட விரும்புகிறாய். ஆசிரியையாக விரும்புகிறாயா? அல்லது மருத்துவராக விரும்புகிறாயா? அல்லது வழக்கறிஞராக விரும்புகிறாயா? என்று ஆசிரியை கேட்டார். அதற்கு "நான் பிரெஞ்சு வீராங்கனையைப் போன்று விளங்கவே விரும்புகிறேன் என்று இந்திரா பதிலளித்தார். நாட்டு விடுதலைப் பணியில் இளமையிலேயே பங்கு கொள்வதற்கு இந்திரா தயாராகி விட்டார், என்பதை அந்த இளமைப் பருவத்திலேயே நன்கு உணர முடிந்தது.

## ஆனந்த பவனம் விடுதலை களத்தின் பாசறை

இந்திரா வளர்ந்து வந்த காலத்தில் ஆனந்த பவனம் விடுதலைக் களத்தின் பாசறையாக விளங்கியது. விடுதலைப் போராட்ட வீரர்கள் அனைவருமே வந்து கூடும் இடமாக ஆனந்த பவனம் விளங்கியது. கருணை வடிவமான அண்ணல் காந்தி ஆனந்த பவனத்துக்கு வருகை தரும்போது அவரது அமைதி கண்டு இந்திரா அகமகிழ்ந்தார். மௌலானா அபுல்கலாம் ஆசாத் கறுத்த தாடியுடன் வருகைதரும் போது அவரது வெண்கலக்குரலின் வேகத்தில் இந்திரா தன்னை மறந்தார். வல்லபாய் பட்டேலின் உணர்ச்சி மிக்க கருத்துக்களில் இந்திரா கவனம் செலுத்தினார் கவிக்குயில் சரோஜினி நாயுடுவிடம் இந்திரா பற்று கொண்டார். ஆனந்த பவனம் இந்திராவிற்கு ஒரு பல்கலைக்கழகமாகவே விளங்கினது. ஆனந்த பவனத்தில் தலைவர்கள் அரசியலைப் பற்றி பேசும் போதெல்லாம் இந்திரா அவர்களையே கூர்ந்து கவனிப்பாள்.

இந்திரா தான் ஒரு பேச்சாளராக வரவேண்டும் என்ற ஆவல் கொண்டிருந்தார். ஒரு தடவை அஹமதாபாத் நகரில் இந்திய தேசிய காங்கிரஸ் மாநாடு நடந்து கொண்டிருந்தது. அம்மாநாட்டை காந்தியடிகளே முன்னின்று நடத்திக் கொண்டிருந்தார். ஆனால் அத்தருணத்தில் மோதிலால் நேருவும், ஜவஹர்லால் நேருவும் சிறைவைக்கப்பட்டிருந்தார்கள். எனவே இந்திராவின் பாட்டி, தாய், அத்தைமார் அனைவருமே மாநாட்டிற்குச் சென்றபோது இந்திராவும் உடன் சென்றார். இந்திரா மாநாட்டு நிகழ்ச்சிகளை நன்றாகக் கவனித்தார். மேடைப்பேச்சுக்களைக் கேட்டு மகிழ்ந்தார். அப்போது தானும் பேச்சாளராக வரவேண்டுமென்ற ஆவல் அவரிடம் ஏற்பட்டது. மாநாடு முடிந்து வீடு திரும்பியதும் தமது ஆவலை பூர்த்தி செய்யும் முயற்சியிலீடுபட்டார். தனது வீட்டுப் பணியாளர்களை ஒன்று கூட்டி அவர்கள் முன்னிலையில் ஆவேசமாக பேசுவார். அனைவரும் ஆர்வத்துடன் இந்திராவின் பேச்சுகளை கேட்கலாயினர். இது போன்று பல தடவை அவர் தனது வீட்டிலேயே கூட்டங்களை நடத்தி மேடைப் பேச்சாளராகும் ஆவலை நிறைவேற்றிக் கொண்டிருந்தார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சிறுவர் காங்கிரஸ் உதயம்

தேசப் பற்று மிகுந்தவர்கள் நேரு குடும்பத்தினர். இந்திராவும் இளமையிலேயே தேசப்பற்றில் அதிக ஈடுபாடு கொண்டிருந்தார். 1930 ஆம் ஆண்டிருக்கும். அப்போது இந்திராவுக்கு பன்னிரண்டு வயது நடைபெற்றுக் கொண்டிருந்தது. ஆனந்த பவனத்துக்கு அடுத்த வீடான "சுவராஜ பவனத்தை" நேரு தேசப்பணிக்கென அர்ப்பணித்து விட்டார். அங்கு காங்கிரஸ் தலைவர்கள் வருகை தருவது வழக்கம். அங்கு சென்ற இந்திரா தன்னையும் காங்கிரஸ் உறுப்பினராகச் சேர்த்துக் கொள்ளுமாறு வேண்டினார். ஆனால் ஆகக்குறைந்தது 18 வயதடையாதவர்கள் உறுப்பினர்களாக சேர்த்துக் கொள்ளப்பட மாட்டார்கள் என்று பதிலளிக்கப்பட்டது.

ஆறு ஆண்டுகள் கழிந்து வந்து சந்திக்கிறேன் என்றவாறு ஆவேசத்துடன் சுவராஜ் பவனத்தை விட்டு வெளியேறிய இந்திராவின் உள்ளத்தில் புதிய எண்ணம் தோன்றியது. தானே தனிப்பட்ட சிறுவர் சங்கம் அமைப்பதற்கு முடிவு செய்தார். தனது முடிவை அலகாபாத்திலுள்ள சிறுவர், சிறுமிகளிடம் அறிவித்து கூடிய ஆதரவைத் தேடினார். முதல் கூட்டத்தை ஆனந்தப்பவனத்திலேயே கூட்டினார். ஆயிரக் கணக்கானோர் அதில் கலந்து கொண்டனர். கூட்டத்தில் சிறுமி இந்திரா பேசத் தொடங்கினாள்.

"நாம் அடிமைகளாகவே இருக்கிறோம். அந்நியரிடமிருந்து நமது நாட்டை விடுவிப்பது நமது கடமை. எனவே நாமும் விடுதலைப் போராட்டத்தில் பங்கு கொள்ள வேண்டும். இந்த ஆவல் மிகுதியால் காங்கிரஸில் உறுப்பினராக சேரவிரும்பினேன். ஆனால் நான் பதினெட்டு வயதையடைய வில்லை என்ற காரணத்தால் என்னைச் சேர்க்க மறுத்து விட்டார்கள். ஆகவேதான் இந்தச் சிறுவர் சங்கத்தை நான் தொடங்கினேன். இதில் எல்லாச சிறுவர்களுமே அங்கத்தவராக சேரலாம். பதினெட்டு வயதுக்கு மேற்பட்டவர்கள் எவருமே இந்த காங்கிரஸில் அங்கத்தவராக சேர்த்துக் கொள்ளப்படமாட்டார்கள் என்று இந்திரா பேசி முடித்தார். பலத்த கைதட்டலும், ஆரவாரமும் எழுந்தது.

சிறுவர் காங்கிரசுக்கு பெயர் சூட்டப்படவில்லை என்றாலும் அது தனது சீரிய பணியைத் தொடங்கிவிட்டது. தேசியக் காங்கிரஸ் ஆற்றிய பணிகளில் எளிமையான சிறிய பணிகளை சிறுவர் காங்கிரஸ் ஏற்றுக் கொண்டது. மாநாடுகளில் அறிக்கைகளை விநியோகித்தல், கொடிகட்டுதல், நீர்விநியோகித்தல் போன்ற பணிகள் சிறுவர் காங்கிரஸிடம் ஒப்படைக்கப்பட்டன. சில வேளைகளில் சிறுவர் காங்கிரஸ் உறுப்பினர்கள் ஒற்றர்களாகவும் துணிந்து செயற்பட்டார்கள். காவல் படையினரின் கண்களில் மண்ணைத் தூவி இரகசிய செய்திகளை காங்கிரஸ் தலைவர்களிடம் தெரிவித்து வந்தார்கள். அதில் சிறுமி இந்திராவுக்கும் முக்கிய பங்குண்டு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிறுவர் காங்கிரஸிற்கு புதிய பெயர் சூட்ட வேண்டுமென இந்திரா விரும்பினார். தனது தாய் கமலா நேருவிடம் வெளியிட்ட போது அவரது ஆலோசனையின் பேரில் "வனர் சேனா" என்று பெயர் சூட்டப்பட்டது.

## பிறந்தநாள் பரிசாக சிறையிலிருந்து கடிதம்

1930 ஆம் ஆண்டு நவம்பர் 19 ஆம் திகதி அன்று இந்திராவின் பதின்மூன்றாவது பிறந்தநாள். வழமையாக பிறந்தநாள் பரிசு வாங்கிக் கொடுக்கும் தந்தை ஜவஹர்லால் நேரு அன்றில்லை. சிறையிலடைக்கப் பட்டிருந்தார். ஆனால் அன்று பிறந்த நாள் பரிசாக இந்திராவுக்கு ஒரு கடிதம் வந்திருந்தது. ஜவஹர்லால் நேரு சுமார் பத்து ஆண்டுகளை தேச விடுதலைக்காக சிறையில் கழித்தவர். அவ்வாறு சிறையில் இருந்த போது தன்மகள் இந்திராவுக்கு அவர் 196 கடிதங்களை எழுதியிருக்கிறார். என்றாலும் தனது மகளின் பதின்மூன்றாவது பிறந்த தினத்தில் நைனி சிறைச்சாலையில் இருந்து அனுப்பப்பட்டதே இந்திராவுக்கு முதல் கடிதமாகும்.

அந்தக் கடிதத்தில் ""

""மகளே நீ பிறந்த ஆண்டு உலக வரலாற்றிலேயே மறக்க முடியாத ஆண்டாகும். ஏழை, எளிய மக்களிடம் கருணையும், பற்றும் கொண்ட ஒரு பெருந்தலைவர். வரலாற்றில் பொன்னெழுத்துக்களால் பொறிக்கத்தக்க ஆரம்பத்தை எழுதும்படி தனது நாட்டு மக்களைத் தூண்டினார். நீ பிறந்த அதே ஆண்டிலேயே ரஷ்யாவையும், சைபீரியாவையும் அப்படியே மாற்றியமைத்த மாபெரும் புரட்சியை மேதை லெனின் தொடக்கினார். நாட்டில் இப்போது நடைபெற்று வருகின்ற விடுதலைப் போரை நேரில் காணும் வாய்ப்பை நீ நேரில் பெற்றுவிட்டாய். மன உறுதியும், சிறந்த பண்பும் கொண்ட தாயை நீ பெற்றுள்ளதால் பெரும் பேறு பெற்றுவளாகிறாய். இந்தியாவின் சேவையில் நீ ஒரு வீராங்கனையாக திகழ வேண்டும். அன்பே உன்னிடமிருந்து விடை பெறுகிறேன்"". என்று ஜவஹர்லால் நேரு குறிப்பிட்டிருந்தார். இவ்வாறு தனது அருமைமகளை ஊக்கமூட்டி வந்தார் நேரு. அண்ணல் காந்தியும் இந்திராவின் படிப்பில் கவனம் செலுத்தி வந்தார்.

இந்த கால கட்டத்திலேயே இந்திராவின் தாய் கமலா நேரு சுகவீனமுற்றார். அவரைப்பற்றியிருந்த நோய் முற்றியது. கமலா நேருவின் உடல் நலம்பெற இடமாற்றம் தேவை. சுவிட்சலாந்தே அதற்குத்தகுந்த இடம் என்று மருத்துவர்கள் கூறிவிட்டார்கள். அதன்படி மனைவி கமலா நேரு, மகள் இந்திராவை அழைத்துக் கொண்டு நேரு கப்பலில் புறபபட்டார். கமலாநேருவின் உடல் நிலை ஒறுவாறு சுவிட்சலாந்தில் சீரடைந்தது. ஒன்றே முக்கால் ஆண்டு இந்திராவின் குடும்பம் சுவிட்சலாந்தில் வாழ்ந்தது. மூன்று பள்ளிகளில் இந்திரா கல்வி கற்க நேர்ந்தது. சுவிட்சலாந்தில் தந்தையுடன் பெரிய நகரங்களைச் சுற்றிப் பார்த்துள்ளார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



மறைந்த தலைவர்களான டிட்டோ நாசருடன் இந்திரா



பிரெஞ்சு ஜனாதிபதி மித்தரானுடன் இந்திரா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



தஞ்சை பெரிய கோயிலில் இராஜராஜ சோழ மன்னனின் ஆயிரமாவது
விழாவில் இந்திரா.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



தன்சானிய ஜனாதிபதி ஜூலியஸ் நியரரேயுடன் இந்திரா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



பிலிப்பைன்ஸ் ஜனாதிபதியின் பாரியார் இமால்டோ மார்க்கோசுடன் இந்திரா



லிபியத் தலைவர் கேர்ணல் கடாபியுடன் இந்திரா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




கியூபா ஜனாதிபதி பிடல்காஸ்ட்ரோவுடன் இந்திரா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



இந்திரா வெளிநாடு சென்றிருந்தபோது



பெற்றோருடன் இந்திரா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தாயரின் உடல் நலம் குறைவு

சுவிட்சலாந்தின் சீதோஷ்ணநிலை கமலா நேருவுக்கு பொருத்தமாக இருந்தது. இதன் விளைவாக அவர் குணமடைந்திருந்தார். ஆனால் நாடு திரும்பியதும் சில நாட்களில் உடல் நிலை சீர் கெடத் தொடங்கியது. கமலாநேரு ஜேர்மனியில் ஒரு மருத்துவவிடுதியில் சேர்க்கப்பட்டார். இந்திராவே தாய்க்கு உறுதுணையாக இருந்தார். துயரத்தில் வாடிய இந்திராவுக்கு ஆறுதல் தெரிவிக்க எவருமே இல்லை. அப்போது இந்திராவின் இளவயது நண்பரான பெரோஸ்காந்தி என்பவர் இலண்டனில் படித்துக் கொண்டிருந்தார். அவருக்கு இந்திராவின் நிலை தெரிய வந்தது. நேருவின் குடும்பத்தை பேரோஸ் காந்திக்கு பிடித்திருந்ததால் இந்திராவுக்கும், கமலாவுக்கும் துணையாக இருந்து உதவிபுரிய அவர் நினைத்தார். அவர் படிப்பை பாதியிலேயே நிறுத்தி விட்டு ஜேர்மனி விரைந்தார். 1936 ஆம் ஆண்டு பெப்ரவரி 28 ஆம் திகதி கமலாநேரு மரணமானார். தாயைப் பிரிந்த இந்திரா தாளாத் துயரம் அடைந்தார். அவருக்கு ஆறுதல் கூற தந்தையும், பெரோஸ் காந்தியையும் தவிர வேறுயாரும் இல்லை. தாயின் மறைவை அவரால் இலகுவில் மறக்க முடியவில்லை.

## பெரேரஸ் காந்தியின் நட்பு

கமலா இறந்த பிறகு நேரு இந்தியாவிற்கு திரும்பி விட்டார். நேருவின் குடும்பம் செல்வந்த குடும்பம். எனினும் விடுதலைப் பணியில் ஈடுபட்டதால் அக்குடும்பம் பெரும் பொருளை இழந்தது. செல்வத்தை இழந்த போதிலும் அக்குடும்பம் சிறிதும் அஞ்சவில்லை இந்திராவை கல்வி கற்பதற்கு இலண்டனுக்கு அனுப்பிவைத்தார் நேரு. அந்தச் சமயத்திலேயே இரண்டாவது உலக யுத்தம் தொடங்கியது. இரண்டே மூன்று ஆண்டுகளில் யுத்தம் உச்ச கட்டத்தை அடைந்தது. உலகில் அச்சம் நிலவியது. இதனால் இந்திராவின் கல்விக்குத் தடை ஏற்பட்டது. இலண்டனில் கல்வி கற்றுக் கொண்டிருந்த இந்திராவுக்கும் பெரோஸ் காந்திக்கும் இடையில் காதல் மலர்ந்தது. அது நேருவுக்கு தெரியாது.

## எதிர்ப்பின் மத்தியில் திருமணம்

இந்திராவுக்கு திருமணம் செய்து வைக்க நேரு விரும்பினார். அதற்கு இந்திராவின் சம்மதத்தை நேரு கேட்டபோது பெரோஸ் காந்தியை மணந்து கொள்ள விரும்புவதாக அவர் குறிப்பிட்டார். ஆனால் நேரு அதை ஏற்கவில்லை. மணந்தால் பெரோஸ் காந்தியையே மணப்பேன் என்று இந்திரா பிடிவாதமாக இருந்தார். இந்திரா — பெரோஸ் காந்தி திருமணத்தை பலரும் விரும்பவில்லை. பலத்த எதிர்ப்பு கிளம்பியது. இந்திரா காஷ்மீர் இந்து பிராமண குலத்தைச் சேர்ந்தவர். பெரோஸ் காந்தி பார்ஸி சமூகத்தைச் சேர்ந்தவர். இந்து மதத்தைச் சேர்ந்த இந்திரா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பார்ஸிய சமூகத்தவரை மணக்கக் கூடாது என்றனர். இந்திரா இந்த எதிர்ப்பைக் கண்டு சிறிதும் அஞ்சவில்லை. இந்திரா காந்தியைச் சந்தித்து தமது விருப்பத்தைத் தெரிவித்தார். காந்தி முழுமனதுடன் இந்திராவின் திருமணத்துக்கு சம்மதம் தெரிவித்து எளிய முறையில் திருமணத்தை நடத்த வேண்டும் என்று கேட்டுக் கொண்டார். இதனைத் தொடர்ந்து மகாத்மாகாந்தியின் ஆலோசனையின் பேரில் ஜவஹர்லால் நேருவும் திருமணத்துக்கு சம்மதித்தார். இந்திராவின் திருமணம் 1942 மார்ச் 26 ஆம் திகதி மிகவும் எளிமையாக நடைபெற்றது. காங்கிரஸ் தலைவர்கள், தொண்டர்கள் இந்திராவின் திருமணத்தில் கலந்து கொண்டு வாழ்த்துக்களைத் தெரிவித்தனர். திருமண நாளன்று இந்திரா ஏனைய பெண்களைப் போன்று பட்டாடை உடுத்தியிருக்கவில்லை. தனது தந்தையார் கதர் நூலில் செய்த சேலையையே உடுத்தியிருந்தார்.

## திருமணத்தின் பின்னரும் பொதுத் தொண்டில் ஈடுபாடு

திருமணத்திற்கு முன்பே காங்கிரஸ் கட்சியில் ஓர் உறுப்பினரானார். திருமணத்தின் பின்னரும் அவருக்கிருந்த நாட்டுப்பற்று சிறிதேனும் குறையவில்லை. கணவனும் மனைவியும் விடுதலை இயக்கத்தில் தீவிரமாக பங்கேற்றனர். பல இன்னல்களை அனுபவித்தனர். 1942 ஆம் ஆண்டில் அகில இந்திய காங்கிரஸ் கமிட்டி கூட்டம் பம்பாயில் நடைபெற்றது. ""வெள்ளையரை வெளியேற்ற வேண்டும்"" என்ற தீர்மானம் இந்த மாநாட்டிலேயே முன்வைக்கப்பட்டது. இதை அறிந்த ஆங்கிலேய அரசு கடுஞ்சினம் கொண்டு தலைவர்களை கைது செய்து சிறையில் தள்ளியது. காந்தி, நேருபோன்றவர்களும் கைதாகினர். இந்திராவின் கணவர் பெரோஸ்காந்தி தலைமறைவானார். அவரை பொலிஸ் தேடிக் கொண்டிருந்தது. தலைவர்கள் எந்த சிறைச்சாலையில் அடைக்கப்பட்டார்கள் என்பது இந்திராவுக்குத் தெரியும். இந்த செய்தியை பலருக்கு அறிவிக்க விரும்பிய இந்திரா கூட்டத்தைக் கூட்டினார். இந்த விபரம் பொலிசுக்கு தெரிந்தது. அவ்வளவு தான் பொலிசார் கூட்டத்தை வளைத்து விட்டனர். அதைக் கண்டு இந்திரா அஞ்சவில்லை. கூட்டத்தின் நடுவில் நின்று கொண்டு இந்திரா பேசத் தொடங்கினார். பேசினால் சுட்டுவிடுவதாக படை வீரன் மிரட்டிதுப்பாக்கியை நீட்டினான். அதுவரை கூட்டத்தில் அமைதியாக நின்று கொண்டிருந்த பெரோஸ்காந்தி பொறுமை இழந்தவரார்க படைவீரன் மீதுபாய்ந்து அவனை தள்ளி வீழ்த்தினார். அதனைத் தொடர்ந்து படை வீரர்கள் மக்கள் மீது தாக்குதலை நடத்தத் தொடங்கினார்கள். இந்திராவின் சேலை கிழிந்தது. அவரது சிவந்த மேனி காயம் பட்டு மேலும் சிவந்தது. உடலில் பல இடங்களில் இரத்தமும் கசிந்தது. கூட்டத்தினர் சிறைச் சாலைக்கு கொண்டு செல்லப்பட்டார்கள். இந்திரா உள்ளூரில் பெண்கள் சிறையில் அடைக்கப் பட்டார். பெரோஸ் காந்தி நைனிடால் சிறையில் அடைக்கப்பட்டார். இந்திரா அடைக்கப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பட்ட அதே சிறைச்சாலையிலேயே அவருடைய அத்தை விஜய லஷ்மியும் இருந்தார்.

## சிறைச்சாலையில் சீர்திருத்தப் பணி

கொடிய குற்றம் இழைத்த பெண்களுடனேயே இந்திராவும் அடைக்கப்பட்டிருந்தார். அதைக் கண்டு அவர் சிறிதளவும் மனங்கலங்க வில்லை. சிறையில் தம்முடனிருந்த குற்றவாளிப் பெண்களுடன் அவர் மனம் விட்டுப் பழகினார். அவர்களைத் திருத்தும் பணியில் இறங்கினார். கல்வியறிவு இருந்தால் அனைவரையும் சீர்திருத்த முடியும் என்று கருதிய அவர் நாள்தோறும் சிலமணிநேரம் சிறைச்சாலைக் குள்ளேயே பெண்களுக்கு கல்விப் போதனையில் ஈடுபட்டார். சிறையிலிருந்தவர்கள் கருத்துடன் கல்வி கற்றனர். புதிய செய்திகளை அறிந்தனர். தெளிவு பெற்றனர். அவர்களது உள்ளத்திலிருந்த கொடிய எண்ணங்கள் உணர்ந்துகள் அகன்றன. குற்றங்கள் செய்தவதும் பாவம் என்பதை அவர்கள் நல்லொழுக்கம் உடையவர்களாக மாறினர். சிறையை கல்விச்சாலை யாக்கிய இந்திராவை பலரும் வாழ்த்தினர்.

## இரு மக்களுக்குத் தாய்

சிறையிலிருந்து விடுதலையான இந்திரா ராஜிவ் காந்தி, சஞ்சய் காந்தி என்ற இரு பிள்ளைகளுக்குத் தாயானார். காலப் போக்கில் அவர் 74 கோடி இந்திய மக்களுக்கும் தாயாவர் என்பதை அவரது சுயநலம் கருதா சேவையும், தொண்டும் பறை சாற்றிக் கொண்டிருந்தது.

இந்திய விடுதலைப் போராட்டம் தொடர்ந்து பல ஆண்டுகள் நடைபெற்றது. சிறைவாசம் பெறாத தலைவர்கள் இல்லை. இறுதியில் ஆங்கிலேயே அரசு பணிந்தது. இந்தியாவுக்கு சுதந்திரம் வழங்க முடிவாகியது. 1974 ஆகஸ்ட் 14 ஆம் திகதி இந்தியாவில் சுதந்திர தேவி ஜனித்தாள். அடிமைத்தளையிலிருந்து பாரதமாத விடுதலையடைந்தாள். அவள் குழந்தைகள் சுதந்திரத்தின் மகிழ்ச்சியினால் ஆனந்தக் கடலில் மூழ்கினார்கள். சுதந்திர இந்தியாவின் முதற்பிரதமராக ஜவஹர்லால் நேரு பதவியேற்றார். நாடு அவரை வாழ்த்தியது. நாட்டில் ஒரு புதிய உற்சாகம் கரை புரண்டு ஓடியதும். ஆனால் அந்த உற்சாகம் நெடுநாள் நிலைக்க வில்லை. வகுப்புக் கலவரம் என்ற நோய் நாட்டில் தலைதூக்கியது.

## கலவரப்பகுதியில் இந்திராவின் பணி

இந்துக்களும், முஸ்லிம்களும் ஒருவரை ஒருவர் பகைத்துக் கொண்டார்கள். உயிரிழந்தார்கள். தலைவர்கள் இந்தக் கொடுமையைக் கண்டு மனம் நொந்தார்கள். கலகத்தை அடக்குவதற்கு பாடு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பட்டனர். இந்த தருணத்தில் மகாத்மாகாந்தி தலைமையில் இந்திரா ஆற்றிய தொண்டு பாராட்டத்தக்கது. டில்லியில் பாதிப்புற்ற பகுதிகளில் நிவாரணப் பணிகளில் ஈடுபடலானுர். பாதிப்புற்றவர்களுக்கு ஆறுதல் கூறி சாந்தப் படுத்திஞர்.

## நேருவின் வேலைப்பளு இந்திராவினுல் குறைத்தது

கலவரம் அடங்கி முதலாவது ஐந்தாண்டுத் திட்டத்தின் கீழ் நாடு பொருளாதார சுபிட்சத்தை நோக்கி சென்று கொண்டிருந்தது. பிரதமர் பதவியை ஏற்றுக்கொண்டிருந்த நேருவுக்கு பொறுப்புகள் மிகுந்தன. வேலைப்பளுவால் நேரு மிகவும் கஷ்டப்பட்டுக் கொண்டிருந்தார். தந்தையின் நிலையைக் கண்ட இந்திரா தந்தைக்கு உதவ வேண்டுமென்று முன்வந்தார். எனினும் குடும்பம் அவருக்குத் தடையாக இருந்தது. தன் குடும்பம் பெரிதா? நாடு பெரிதா? என்று தனக்குள் சிந்தித்தவர் நாடே பெரிது என்ற தீர்மானத்துக்கு முன்வந்தார். இதையறிந்த நேரு ஆறுதலடைந்தார். இந்திராவின் உதவி கிடைத்ததும் நேருவின் வேலைகளில் பாதி குறைந்தன. இந்திரா தனது தந்தைக்கு உதவுவதுடன் மாத்திரம் நிற்கவில்லை. சமுதாயப்பணிகளிலும் தன்னை மறந்து ஈடுபட்டார். நாட்டுக்கும், சமுதாயத்துக்கும் தொண்டு புரிவதை பெரும் பேறுகக் கருதிஞர். பலரும் அவரது பணிகளைப் பாராட்டிப் பேசினுர்கள்.

## காங்கிரஸ் கமிட்டியில் அங்கத்தவராஞர்

காங்கிரஸ் நிர்வாகக் கமிட்டியிலும், காங்கிரஸ் கட்சி தேர்தல் கமிட்டியிலும் இந்திரா 1955 ஆம் ஆண்டு அங்கத்தவராக நியமனம் பெற்றுர். காங்கிரஸ் மத்திய பாராளுமன்ற சபையில் 1958 ஆம் ஆண்டு இந்திரா இடம் பெற்றுர். 1956 ஆம் ஆண்டு அகில இந்திய இளைஞர் காங்கிரஸிலும் பெண்கள் பிரிவிலும் தலைவராக நியமனம் பெற்றுர். 1959—1960 ஆம் ஆண்டு காலப் பகுதியிலும் அகில இந்திய காங்கிரஸின் தலைவராஞர். நேரு பிரதமராக இருந்த காலப்பகுதியில் அரசியல் விவகாரங்களில் இந்திரா நன்கு பயிற்றுவிக்கப்பட்டார். நேரு வெளிநாடு செல்லும் போதெல்லாம் மகள் இந்திராவும் கூடவே கூட்டிச் செல்லப்பட்டார். சர்வதேச மாநாடுகளில் நேரு கலந்துக் கொள்ளும் போது இந்திராவும் அவற்றை தவற விடுவதில்லை. இதன் மூலமாக இந்திராவுக்கு நல்ல பயிற்சியும், அனுபவமும் கிடைத்தது. இதுவே எதிர் காலத்தில் இந்திரா சிறந்த உலகத் தலைவராக வருவதற்கு வழியேற்படுத்திக் கொடுத்தது.

## கணவரின் மறைவு

இந்திரா அகில இந்திய காங்கிரஸ் கட்சியின் தலைவராக (1959 — 1960) இருக்கும் போதே அவரது கணவர் பெரோஸ்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காந்தி இருதய நோயினால் பாதிப்புற்றார். இதனைத் தொடர்ந்து காங்கிரஸ் கட்சியின் தலைமைப்பதவியிலிருந்து விலகிய அவர் தன் கணவர் பெரோஸ் காந்தியின் அருகிலிருந்து பணி புரியலானார். ஆனால் பெரோஸ் காந்தியின் உடல்நிலை சீர் படவில்லை. சிறிது காலத்தில் அவர் இறந்தார். இந்திரா பெருந் துயரில் மூழ்கினார். இந்த சமயத்திலேயே 1962 ஆம் ஆண்டு சீனா இந்தியா மீது படையெடுத்தது. நாட்டுக்கு வந்த ஆபத்தை உணர்ந்து வீட்டைப்பற்றிய கவலையை விட்டொழித்தார். மறு படியும் பொது வாழ்வில் ஈடுபடலானார். முன்னரைப் போலவே தந்தைக்கு உதவி புரியலானார்.

### தந்தையின் மறைவினால் இந்திராவின் கலக்கம்

சீனப் படையெடுப்பே இந்திய மக்களையும் தலைவர்களையும் விழிப்புறச் செய்தது. ஆனாலும் யுத்தத்தைத் தொடர்ந்து நேருவின் உடல் நிலை சீர்கெடத் தொடங்கியது. புவனேஸ்வரத்தில் இடம்பெற்ற காங்கிரஸ் மாநாட்டில் நேரு கலந்து கொண்டார். அங்கு தான் அவரது உடல்நிலை மோசமானது. அதன் பின்னர் அவரது உடல் நலத்தில் முன்னேற்றம் ஏற்படவே இல்லை. இறுதியில் சுதந்திர இந்தியாவின் முதற் பிரதமரான ஆசியஜோதி நேரு 1964 ஆம் ஆண்டு மே மாதம் 27 ஆம் திகதி காலமானார். நாடு பெருந்துயரில் மூழ்கியது. மகள் இந்திராவின் துயரத்துக்கு எல்லையில்லை. ஒன்றன்பின் ஒன்றாக இந்திராவுக்கு வாழ்க்கையில் சோதனைகள் ஏற்படலானது. உயிருக்குயிராக நேசித்து வந்த கணவரின் மறைவு இந்திராவுக்கு பெரும் தாக்கத்தை ஏற்படுத்தியிருந்தது. அதைத் தொடர்ந்து தந்தை ஜவஹரின் மறைவினால் சிறகொடித்த பறவை போலானார் இந்திரா இந்த துக்கத்திலிருந்து அவரால் இலகுவில் மீள முடியவில்லை.

### லால்பகதூர் ராஸ்திரியின் விருப்பம்

இந்தியாவின் முடிசூடா மன்னராக இருந்தவர் ஜவஹர்லால் நேரு. மக்கள் மனதில் நிலையான இடம் பெற்றவர். அவர் இறந்ததும் யாரை பிரதமராக்குவது என்ற கேள்வி எழுந்தது. இந்திராவோ தந்தை இறந்த துயரில் மூழ்கியிருந்தார். அவரைப் பிரதமராக்குவது முறையல்ல என்று நினைத்தார்கள். அனைவரும் லால்பகதூர் சாஸ்திரியின் பெயரையே முன் வைத்தனர். லால் பகதூர் சாஸ்திரி சிறந்த அறிவாளி. உழைப்பால் உயர்ந்து அரசியலில் நன்கு மதிக்கப் பெற்றவர். நேருவினதும், இந்திராவினதும் அன்புக்கு பாத்திரமானவர். ஆதலால் அனைவருமே லால் பகதூர் பிரதமராவதை வரவேற்றனர். எனவே லால் பகதூர் இந்தியாவின் இரண்டாவது பிரதமரானார். நாட்டு மக்கள் மன நிறைவு பெற்றனர். சில மாதங்கள் கடந்தன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தேசப்பணிக்காக இளமையிலிருந்தே பாடுபட்டு வந்த இந்திரா அரசியலில் இருந்து ஒதுங்கி இருந்ததை லால்பகதூர் சாஸ்திரி விரும்பவில்லை. இந்திராவை தனது மந்திரி சபையில் அமைச்சராக்க அவர் விரும்பினார். தனது விருப்பத்தை சக அமைச்சர்களிடமும் தெரிவித்தார். அனைவருமே ஏகமானதாக அதை வரவேற்றனர். எனினும் அந்த சூழ்நிலையில் தான் அமைச்சராவதை இந்திரா விரும்பவில்லை. ஆனாலும் லால்பகதூர் சாஸ்திரியின் அன்பு வேண்டுகோளை இந்திராவால் மறுக்க முடியவில்லை. அதன் விளைவாக 1964 ஆம் ஆண்டு லால் பகதூர் சாஸ்திரியின் அமைச்சரவையில் செய்தி ஒலிபரப்புத்துறை அமைச்சராக இந்திரா பதவியேற்றார்.

## இந்திரா செய்தி ஒலிபரப்புத்துறை அமைச்சரானார்

இந்த காலக்கட்டத்திலேயே 1965 ஆம் ஆண்டு இந்தியா மீது பாகிஸ்தான் படையெடுத்தது. இந்தியாவுக்கும், பாகிஸ்தானுக்கும் இடையில் யுத்தம் மூண்டது. இந்திரா அந்த சமயத்தில் ஆற்றிய தொண்டு அதிசயிக்கத் தக்கது. தேனி போன்று அவர் சுறுசுறுப்புடன் பணியாற்றினார். படைவீரர்கள் தங்கியிருந்த முகாம்களுக்குச் சென்று வீர உரை ஆற்றினார். படைவீரர்கள் மத்தியில் வீர உணர்வை ஊட்டினார். நாடெங்கும் பல பொது கூட்டங்களில் பேசினார். மக்களிடம் ஒற்றுமையை நிலை நாட்டினார். அரசாங்கத்திற்கு ஆதரவு திரட்டினார். இறுதியில் யுத்தத்தில் இந்தியா வென்றது.

### சாஸ்திரியின் மரணம்

அயல் நாடுகளான இந்தியாவுக்கும் பாகிஸ்தானுக்கும் இடையில் பகை வளர்வதை உலகத் தலைவர்கள் விரும்பவில்லை. அவர்களில் மறைந்த சோவியத் பிரதமர் அலக்ஸிகொஸிஜின் முதன்மையானவர். இந்தியப் பிரதமரும். பாகிஸ்தான் அதிபரும் ஒன்று கூடி பேசி உடன்படிக்கை செய்து கொள்ள வேண்டும் என்று விரும்பினார். அதற்கென 1966 ஜனவரியில் தாஷ்கண்டில் சந்திப்புக்கு ஏற்பாடு செய்தார், பிரதமர் கொஸிஜின். இந்தியப் பிரதமர் லால்பகதூர் சாஸ்திரியும், பாகிஸ்தான் அதிபர் ஜெனரல் அயூப்கானும் 1966 ஜனவரி 10 ஆம் திகதி தாஷ்கண்ட் பிரகடனத்தில் கைச்சாத்திட்டனர் இந்தியாவும். பாகிஸ்தானும் இனிமேல் நட்புடன் வாழும். எந்தக் காரணத்தைக் கொண்டும் இரு நாடுகளுக்கும் இடையிலும் போர் மூளமாட்டாது என்று சாஸ்திரியும் அயுப்கானும் கூட்டறிக்கை வெளியிட்டனர். அந்த அறிக்கையை உலகம் வரவேற்றது. அனைவரும் பாராட்டினர். ஆனால் அந்த அறிக்கை வெளியான அன்றைய தினம் இரவு லால்கபதூர் சாஸ்திரி இருதய நோயினால் காலமானார். இந்தியா தனது இரண்டாவது பிரதமரையும் இழந்துவிட்டது. யாரைப் பிரதமராக்குவது என்ற கேள்வி மறுபடியும் எழுந்து விட்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சாஸ்திரியின் மறைவின் பின்னர் பிரதமராவது யார்?

பிரதமர் லால்பகதூர் சாஸ்திரியின் மறைவுக்குப் பின்னர் காங்கிரஸ் கட்சி யாரை தலைவராக தெரிவு செய்யும் என்பது எவருக்குமே தெரிந்திருக்கவில்லை. காங்கிரஸ் தலைவர்கள் தேர்தலுக்கு முன்னர் கட்சித் தலைவராக பலரது பெயர்கள் அடிப்பட்டன. முன்னாள் பிரதமர் திரு. மொரார்ஜி தேசாய் அப்போது கட்சியின் சிரேஷ்ட தலைவராக இருந்தார். ஆனால் எல்லோராலும் அவர் ஏற்றுக்கொள்ளக் கூடியவரா? என்ற சந்தேகம் இருந்தது. அவருக்கு அடுத்தபடியாக பாதுகாப்பு அமைச்சராக இருந்த வை. பி. சவானின் பெயரும் அடிபட்டது. சாஸ்திரியின் மறைவைத் தொடர்ந்து பதில் பிரதமராக இருந்த குல்சாரிலால் நந்தாவின் பெயரும் அடிபட்டது.

எவ்வாறாயினும் காங்கிரஸ் கட்சி தனக்கே உரித்தான வழியில் செயற்பட்டது. ஒருவர் மிகத் தெளிவாக தெரிவு செய்யப்படிக்கூடிய வாய்ப்பு இல்லாததால் மொரார்ஜி தேசாயும், இந்திரா காந்தியும் மோதவிடப்பட்டனர். இருவரும் சமமானவர்களாக இல்லாத போதிலும் நேரடியான போட்டி ஏற்பட்டது. தேசாய் பழுத்த அரசியல்வாதியாகவும், நிர்வாகியாகவும் விளங்கினார். காங்கிரஸ் கட்சிக்குள்ளும் அவருக்கென ஒரு கோஷ்டி இருந்தது. ஆனால் அவை இந்திரா காந்திக்கு இருக்கவில்லை. இந்திரா புதியவர், தந்தை நேருவுடன் நெருங்கி இருந்தவர் என்பதைத் தவிர அரசியலிலோ, நிர்வாகத்திலோ பெரிய அனுபவம் இல்லாதவர். சாஸ்திரியின் அமைச்சரவையில் ஒன்றரை ஆண்டு காலம் தகவல் துறை அமைச்சராக இருந்தவர்.

## மொரார்ஜியைத் தோற்கடிக்கச் செய்தார்

கட்சியில் அவரைப் பின்பற்றுபவர்கள் யார் என்பது கூட தெரிந்திருக்கவில்லை. எனினும் கட்சியால் 1966 ஆம் ஆண்டு ஜனவரியில் நடத்தப்பட்ட வாக்கெடுப்பில் இந்திராவுக்கு 355 வாக்குகளும் மொரார்ஜி தேசாய்க்கு 169 வாக்குகளும் கிடைத்தன. இருவரினதும் தகைமைகளை அறிந்திருந்தும் கூட கட்சி உறுப்பினர்கள் தேசாயை விடுத்து இந்திராவை தெரிவு செய்தது? ஏன்? இத்தெரிவுக்கு பல காரணங்கள் கூறப்பட்டன. கட்சிக்குள் இருந்த கோஷ்டிப் பிளவின் காரணம் பரவலாக ஏற்றுக் கொள்ளப்பட்டது. காங்கிரஸில் மிக செல்வாக்கு பெற்ற தலைவராக இருந்த காமராஜரின் ஆதரவு இந்திராவுக்கு கிடைத்தது இந்திராவின் வெற்றிக்கு ஒரு காரணம். அடுத்ததாக மொரார்ஜி தேசாயின் சர்வாதிகாரப் போக்கும், இந்திராவுக்குக் கிடைத்த ஆதரவுக்கு மற்றொரு காரணமாகும்.

இந்திராவின் உயர்வில் நேருவின் செல்வாக்கு மறுக்கப்படக் கூடியதல்ல. ஆனால் இந்திராவின் கடந்த கால செயல்களும்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அனுபவங்களும் அதற்குப் பொருத்தமாக நின்றது மறக்கப்படக் கூடியதல்ல. தலைவர் பதவியேற்ற குறுகிய காலத்திலேயே தான் ஒரு காரியக்காரி என்பதை நிரூபிக்கக்கூடியவராக அவர் இருந்தார். கேரளாவில் நம்பூதிரிபாட் தலைமையிலான காங்கிரஸ் அரசை வெளியேற்றுவதில் அவர் கண்டவெற்றி இதில் ஒன்றாகும்.

அரசியல் பிரச்சினையானாலும், பொருளாதாரப் பிரச்சனையானாலும் இந்திரா காட்டிய துணிவு இன்னும் பாராட்டப்படுகிறது. அரசியலில் அதிர்ச்சி வைத்தியம் பார்ப்பதில் அவர் வல்லவராகவே திகழ்ந்தார். எதிர் கட்சிகளுக்கு இந்திரா சிம்மசொப்பனமானார். வங்கதேச யுத்தத்தின் மூலம் ஒரு நாட்டை உருவாக்கிய வீராங்கனையாகவும் அவர் விளங்கினார். தீர்மானங்களை மேற்கொள்ளவதிலும் அவற்றில் உறுதியாக நிற்பதிலும் அவருக்கு நிகர் அவரே. தனது நடவடிக்கைகளின் வழி சரியானதென்று முடிவுக்கு இந்திரா வருவாரேயானால் அவரது மனதை எவராலும் மாற்ற முடியாது என்பதை அவரது அரசியல் முடிவுகள் எடுத்துக் காட்டியுள்ளன.

## பல்வேறு அமைச்சர் பொறுப்புகளை வகித்தவர்

தகவல் ஒலிபரப்பு அமைச்சராக பதவியேற்ற (1964—1966] காலத்திலிருந்து பல்வேறு அமைச்சர் பொறுப்புகளை இந்திரா ஏற்றுள்ளார். இதனால் அவர் அரசியலில் மென்மேலும் அனுபவம் பெற்றுக் கொள்ளக் கூடியதாக இருந்தது. 1966 ஆம் ஆண்டிலிருந்து 1977 ஆம் ஆண்டுவரை இவரே பிரதம மந்திரியாக இருந்தார். அதன் பின்னர் 1980 ஆம் ஆண்டு ஜனவரி 14 லிருந்து 1984 ஆம் ஆண்டு அக்டோபர் 31 ஆம் திகதி வரையும் பிரதம மந்திரியாக இருந்துள்ளார். இதைத்தவிர அணு சக்தி. எரிவளத்துறை அமைச்சராக 1967 செப்டெம்பர் மாதத்திலிருந்து 1977 மார்ச் வரையும் இருந்துள்ளார். மீண்டும் அதே பதவியை 1980 ஆம் ஆண்டு பிரதமராக பதவியேற்றதும் பொறுப்பேற்றுக் கொண்டார். 1980 ஆம் ஆண்டிலிருந்து திட்டக் கமிஷனின் தலைவர் பொறுப்பையும் பிரதமர் இந்திராவே ஏற்றுக் கொண்டார். அதே வேளை விஞ்ஞான கைத்தொழில் ஆராய்ச்சிக் கவுன்சிலின் தலைவமைப் பொறுப்பையும் அவரே பொறுப்பேற்றார். 1967 ஆம் ஆண்டிலிருந்து 1969ஆம் ஆண்டுவரை வெளிவிவகார அமைச்சர் பொறுப்பையும் பிரதமர் இந்திராவே ஏற்றுக்கொண்டார்.

1969 ஆம் ஆண்டிலிருந்து 1970 ஆம் ஆண்டு வரை நிதியமைச்சரா கவும் அவர் கடமையாற்றியுள்ளார். 1970 ஆம் ஆண்டிலிருந்து 1973 ஆம் ஆண்டு வரை உள்துறை அமைச்சராகவும் பிரதமர் இந்திரா பணியாற்றியுள்ளார். இதைத்தவிர முக்கிய அமைச்சர் பதவியான பாதுகாப்பு அமைச்சர் பதவியையும் 1980 ஆம் ஆண்டிலிருந்து 1982 ஆம் ஆண்டுவரை ஏற்றுள்ளார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பல்வேறு அமைச்சர் பதவிகளில் இருந்து இந்தியாவின் முன்னேற்றத்திலும் நாட்டு மக்களின் வளர்ச்சியிலும் அவர் பணியாற்றியிருப்பதற்கு இதைவிட வேறு சான்று இருக்க முடியாது.

## இந்திராவுக்குக் கிடைத்த சர்வதேச விருதுகள்

தேச விடுதலை, மனித நேயம், சமூகமுன்னேற்றம், சர்வதேச புரிந்துணர்வுக்காக பிரதமர் இந்திரா தனது சொந்த நாட்டிலும், உலக அரங்கிலும் பாராட்டப்பட்டவர். அவர் உலகச் சமுதாயத்தின் விடிவுக்காக அதிக பங்களிப்பைச் செய்துள்ளார். இதன் விளைவாக அவருக்குக் கிடைத்த விருதுகளும், பாராட்டுதல்களும் ஏராளம்.

தெற்காசியாவில் பாகிஸ்தானிடமிருந்து வங்கதேசம் என்ற புதிய நாட்டை 1971 ஆம் ஆண்டு உருவாக்கிக் கொடுத்தவர் பிரதமர் இந்திரா காந்தி. இவரது பராக்கிரமத்தையும், விவேகத்தையும் மெச்சிய உலகத் தலைவர்கள், அநேகர். இதன் விளைவாக 1972 ஆம் ஆண்டு மெக்சிகன் அகடமி வங்கதேச விடுதலை வீராங்கனை"" என்ற சிறப்பு விருதை வழங்கி பிரதமர் இந்திராவை கௌரவித்தது. அதே ஆண்டு இந்திராவின் வீரமிகு தேசப் பணியைப் பாராட்டி இந்திய மக்கள் அதி உயர் விருதான "" பாரத ரத்னு"" என்ற விருதை வழங்கி கௌரவித்தார்கள். உலக உணவு விவசாய தாபனத்தால் 1973 ஆம் ஆண்டு வருடாந்த விருதும் பிரதமர் இந்திராவுக்கே வழங்கப்பட்டது. 1953 ஆம் ஆண்டு அமெரிக்காவில் "" அன்னைவிருதும்"" இந்திராவுக்கே கிடைத்தது. பிரதமர் இந்திரா இராஜதந்திரிப் பணியைப் பாராட்டி 1967, 1968 ஆம் ஆண்டுகளில் இத்தாலியில் விருது வழங்கி இந்திரா கௌரவிக்கப்பட்டார். 1971 ஆம் ஆண்டு பிரெஞ்சு அபிப்பிராய கணக்கெடுப்பு நிலையத்தினரால் நடத்தப்பட்ட தெரிவில் "" உலகில் அதிகம் மதிக்கப்படும் பெண்மணியாக தேர்ந் தெடுக்கப்பட்டு கௌரவிக்கப்பட்டார். விலங்கினங்களைப் பாதுகாக்க பிரதமர் இந்திரா மேற் கொண்ட ஆக்கபூர்வமான பணிகளைப் பாராட்டிய ஆர்ஜன்டின சங்கம் 1971 ஆம் ஆண்டு அவருக்கு ""டிப்ளோமா"" பட்டத்தை வழங்கி பாராட்டியது. இதே போன்று 1982 ஆம் ஆண்டு நெதர்லாந்து இளவரசராலும் விருது பிரதமர் இந்திராவுக்கு கிடைத்தது.

கிழக்கு — மேற்கு புரிந்துணர்வுக்காக 1982 ஆம் ஆண்டு "" ஊதாண்ட்"" விருதும் பிரதமர் இந்திராவுக்கே கிடைத்தது. அமெரிக்கா குடிசன நடவடிக்கை கவுன்சிலினால் 1982 ஆம் ஆண்டு "" கௌரவ பாராளுமன்ற விருதும்"" பிரதமர் இந்திராவுக்கே வழங்கப்பட்டது. 1983 ஆம் ஆண்டு "" ஒலிம்பிக் தங்க விருதும்"" பிரதமர் காந்திக்கே வழங்கப்பட்டது. அதே ஆண்டு குடிசன கட்டுப்பாட்டு நடவடிக்கையைப் பாராட்டி ஐ. நா. வினால் விருது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வழங்கி கௌவிக்கப்பட்டார் பிரதமர் இந்திரா காந்தி. இவை அனைத்துக்கும் மேலாக "" லெனின் சமாதான விருது """ பிரதமர் காந்திக்கு கௌரவ விருதாக 1985 ஆம் ஆண்டு மே மாதம் அவரது புதல்வர் பிரதமர் ராஜிவ் காந்தியிடம் வழங்கப்பட்டிருக்கிறது.

பிரதமர் காந்தி ஆற்றிய உலகளாவிய மனித நேயப் பணியை எடை போடும் போது இத்தனை கௌரவ விருதுகளுக்கும் அவர் உரித்துடையவர் என்பதில் இந்திய மண் பெருமையடைகிறது.

## இந்திராவின் இருபது அம்சத் திட்டம்

இந்தியாவில் ஏழை மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதிலும், சமூகநல திட்டங்களை வகுத்து செயற்படுத்துவதிலும் மறைந்த பிரதமர் காந்தி அதிக ஈடுபாடு கொண்டிருந்தார். அவரது இருபது அம்சத் திட்டம் முழு இந்தியாவின் எழுச்சிக்கும், வளர்ச்சிக்கும் எடுத்துக் காட்டாக விளங்கியது. இந்தியாவின் சமூக, பொருளாதார வளர்ச்சித் துறையில் இருபது அம்சத் திட்டத்தின் பங்களிப்பை எளிதில் ஒதுக்கிவிட முடியாது. அவரது இருபது அம்சத் திட்டத்தை பாராட்டாதவர்கள் எவருமே இல்லை.

மாநிலங்களிலும், யூனியன் பிரதேசங்களிலும் ஏழை மக்கள் மத்தியில் பெரும் செல்வாக்கு பெருகத் தொடங்கியது. இந்தியாவில் ஏழை மக்களின் விடிவெள்ளியாகவே மறைந்த பிரதமர் காந்தி கருதப்பட்டார். அவரது இருபது அம்சத் திட்டத்தைப் போன்ற ஒரு முன் மாதிரியான திட்டம் முன்னர் ஒரு போதும் இந்தியாவில் அமுல்படுத்தப்பட்டதில்லை. இந்தியாவின் பொருளாதார வளர்ச்சியிலும், மக்களின் சமூக நல மேம்பாட்டுத் துறையிலும் அவர் கொண்ட சிரத்தையே இருபது அம்சத் திட்டத்துக்குக் காரணமாகும். பிரதமர் தனது இருபது அம்சத் திட்டத்தை 1982 ஜனவரி 14 ஆம் திகதி பாராளுமன்றத்தில் அறிவித்திருந்தார்.

பிரதமரின் இருபது அம்சத் திட்டத்தின்படி ஏழைமக்கள், நலிவுற்ற மக்கள் நேரடியாகவே நன்மையடையக் கூடியதாக இருக்கிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இவை தான் பிரதமரின் இருபது அம்சத் திட்டங்கள்

1. நீர்ப்பாசன வளங்களையும், தொழில் நுட்பத்தையும் பயன்படுத்தி வரண்ட நிலங்களில் விவசாய செய்கையை மேற்கொள்ளுதல்.
2. கறிச்சரக்குகள் மற்றும் காய்கறி எண்ணெய் விதை உற்பத்தியை அதிகரிப்பதற்கு விசேட நடவடிக்கை.
3. ஒருங்கிணைக்கப்பட்ட கிராம அபிவிருத்தியையும், கிராமிய வேலை வாய்ப்புத் திட்டத்தையும் விரிவு படுத்தல்.
4. விவசாய நில உச்ச வரம்புச்சட்டத்தின் கீழ் மேலதிக காணிகள்.
5. விவசாயத்துறைச் சார்ந்த தொழிலாளருக்கு ஆகக்கூடிய வேதனத்தை மீளாய்வு செய்தல்.
6. தொழிற்றுறை புனரமைப்பு நடவடிக்கை.
7. செடூல் வகுப்பினருக்கும், பழங்குடி மக்களுக்குமான ஒரு ஒன்று சேர்கப்பட்ட திட்டத்தை துரிதப்படுத்தல்.
8. சகல கிராமமக்களுக்கும் குடிநீர் விநியோகத் திட்டத்தை ஏற்படுத்தல்.
9. கிராமிய பகுதிகளில் வாழும் மக்களின் வீடமைப்பு வசதிகளை விரிவுப் படுத்தல்.
10. குடிசை வாழ் பகுதிகளில் சுற்றுடல் வசதிகளை விரிவு படுத்தல். பொருளாதார ரீதியாக வசதி குறைந்தவர்களுக்கு வீடமைப்பு வசதிகளை செய்து கொடுத்தல்.
11. சகல கிராமங்களிலும் ஆகக் கூடியளவு மின்சார வசதியை பயன்படுத்தத் தக்க வகையில் வசதிகளை செய்தல்.
12. காடு வளர்ப்பு, மற்றும் பண்ணைத் தொழில் மூலமாக உயர்ரக வாயுமாற்று எரிசக்தி வளங்களை விருத்தி செய்தல்.
13. மக்கள் இயக்கங்கள் மூலமாக குடும்பக்கட்டுப்பாட்டுத் திட்டத்தை ஊக்குவித்தல்.
14. தொழுநோயைக் கட்டுப்படுத்தவும், கசரோகத்தையும், குருட்டு தன்மையையும் நீக்கவும் பல பூர்வமான சுகாதார நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல்
15. பழங்குடி மக்கள் வாழும் பகுதி, மலைப்பிரதேசம், பிற்பட்ட பகுதி களில் குழந்தைகளுக்கும், தாய்மார்களுக்குமான சேமநல திட்டத்தை விருத்தி செய்தலும் கர்ப்பிணித்தாய்மாருக்காக போஷாக்கு திட்டத்தை விருத்தி செய்தல்.
16. கல்வியறிவை விருத்தி செய்யுமுகமாக ஆறுவயதுக்கும் 14 வயதுக்கும் இடைப்பட்ட ஆண் பெண் இரு பாலாரிடையே படிப்பறிவை ஊக்குவித்தல்.
17. நியாய விலைக்கடைகள் நடமாடும் கடைகள் மூலமாக அவசிய பொருட்களை குறைந்த விலையில் விற்பனை செய்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தல். மாணவர்கள் பாடசாலைப் புத்தகங்கள் அப்பியாசக் கொப்பிகளைப் பெறுவதற்கு வசதி செய்தல்.

18. திட்டங்களை நிறைவேற்றுமுகமாக முதலீட்டு ஒழுங்கு முறைகளில் கைத்தொழில் கொள்கைகளிலும் தளர்வை ஏற்படுத்தல். அதேவேளை கைப்பணி, கைத்தறி, குடிசைக் கைத்தொழில் வளர்ச்சிக்கென தொழில் அட்டைகளை பயன்படுத்தல்.

19. கள்ளச் சந்தைக்காரர்கள், கடத்தல் காரர்கள், கறுப்புப் பணக் காரர்கள் வரி ஏய்ப்போர் மீதான நடவடிக்கையை தொடருதல்.

20. உள்ளூர் மூலவளங்களைப் பயன்படுத்தி பொதுத்துறை நிருவனங்களிடையே உற்பத்தியை அதிகரித்தல்.

## இந்தியாவின் வெளிநாட்டுக் கொள்கை தொடர்பாக பிரதமர் இந்திரா விளக்கம்

ஒரு நாட்டின் அயல்துறைக் கொள்கையை அந்நாட்டின் உள்நாட்டு கொள்கையிலிருந்து பிரிக்க முடியாது. எங்கள் அயல் துறை கொள்கை என்ன? "அணிசேராமை" என்பதை எமது முழு வெளிநாட்டுக் கொள்கை என சிலர் நினைக்கிறார்கள். நாம் சுதந்திரமாக எல்லா விவகாரங்களையும் தீர்மானிக்கின்ற போதே "அணிசேராமை" என்ற பதத்தில் சரியான பாதையில் நிற்கிறோம். எந்த நாடுகளையோ, எந்த குழுக்களையோ பிணைக்க நாம் விரும்பவில்லையென்று பிரதமர் இந்திரா வெளிநாட்டுக் கொள்கை தொடர்பாக விளக்கமளித்துள்ளார்.

21 ஆம் நூற்றாண்டை நோக்கி நாம் சென்று கொண்டிருக்கிறோம். ஆனாலும் உலகில் பெரும் பகுதி இன்றும் விழிப்படைய வில்லை. உலகம் மாற்றமடைகிறது. நாமும் மாற்றமடைகிறோம். இந்தியாவின் சுதந்திர இயக்கத்தினால் இந்தியா விடுதலை அடைந்தது. இது உலகில் மிகப் பெரும் மாற்றமாகும். இத்தகைய விடுதலை பிற நாடுகளினதும் சுதந்திரத்துக்கு வழிகாட்டியது. இது காலனித்துவ நாடுகளுக்கு பெரும் அடியாகும்.

"அணிசேராமை" என்ற பதமானது நோக்கத்தை பூர்த்தி செய்யவில்லை. அது வெற்றி அளிக்கவில்லை என சிலர் கூறுகிறார்கள். அதற்கான மாற்று பரிகாரம் என்ன? அப்படியானால் நாம் அணிசார்ந்திருக்க வேண்டும். அப்படி சார்வதால் எந்த குழுவுடன் சார்ந்திருக்க வேண்டும்? பொதுவாக கிழக்கு அணி, மேற்கு அணி என்ற குழுக்களே உள்ளன, இத்தகைய அணியில் சேருமுன்னர் இரண்டிலுமே கடந்த காலங்களில் பிளவு ஏற்பட்டனவென்பதை உணர வேண்டும். இத்தகைய பிளவுபட்ட அணிகளுடன் இCவோமா? இந்த கேள்வி எழும் போது மேற்கு நாட்டு அணிகளுடன் சேருவோமா? அந்நாடுகளின் இராணுவ அணிகளுடன் சேருவோமா? அல்லது கிழக்கு நாடுகளின் அணியுடன்சேரு வோமா? அல்லது அந்நாட்டுகளின் இராணுவ அணியுடன் சேருவோமா?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்தக் கேள்வியை உற்று நோக்கும் போது இந்த அணிகளில் சேருவதானால், எந்த அணியிலும் சேருவது எமக்கு நன்மை பயக்காது என்ற முடிவுக்கு உடனடியாக வர வேண்டியிருக்கும். இதனால் தான் மூன்றாவது நிலையான மூன்றாவது அணிக்கு நாம் வர வேண்டியிருக்கிறது. அணிசேரா இயக்கத்துக்கு எதிரானவர்கள் இயக்கத்தின் தாபகரான என் தந்தையையும், என்னையும் கடுமையாக தாக்கி விமரிசிக்கிறார்கள். வெளிநாட்டுக் கொள்கைக்கு எதிராகவே மிகப்பெரும் ஆயுதம் பயன்படுத்தப்படுகிறது. நாம் சோவியத் வழியில் செல்வதாக விமரிசிக்கப்படுகிறது.

**சர்வதேச அரங்கில் இந்தியாவின் பங்களிப்பு**

இந்திய சர்வதேச அரங்கில் இன்று செல்வாக்கு மிக்க சக்தியாக விளங்குகிறது. இந்தியா பின்பற்றி வரும் அயல்துறைக் கொள்கையே இந்த பெருமைக்கு காரணம். அத்தகைய பெருமைக் குரிய அயல்துறைக் கொள்கையை முன்னெடுத்துச் சென்ற சிறப்பு மறைந்த பிரதமர் காந்திக்கே உரியது. காந்தியின் சமாதான முன் முயற்சிகளும், ஆக்கபூர்வமான நடுநிலைக் கொள்கைக் கோட்பாடுகளும் இந்தியாவின் கீர்த்தியை உலக அரங்கில் பறைசாற்றின.

இந்தியாவின் அயலுறவுக் கொள்கை சர்வதேச அரங்கில் விமரிசனத்துக்கு ஆளாகாமல் தளம்பாமல் உறுதியாக நிற்கிறது. அத்தகைய ஸ்திரமான நிலைக்கு ஆரம்பத்தில் ஆசிய ஜோதி நேரு வழிகாட்டிச் சென்றார்.

இந்தியா சுதந்திரம் அடைந்த காலத்தில் இருந்தே அதன் வெளிநாட்டுக் கொள்கை தெளிவுபடுத்தப்பட்டு விட்டது. இந்தியாவின் வெளிநாட்டுக் கொள்கை **1954** ஆம் ஆண்டு பஞ்சசீல உடன் படிக்கையில் தெளிவாகச் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது. அதன் பின்னர் **1966** ஆம் ஆண்டு தாஷ்கண்ட பிரகடனம், **1971** ஆம் ஆண்டு இந்திய — சோவியத் நட்புறவு உடன் படிக்கை, **1972** ஆம் ஆண்டு இந்திய — வங்கதேச சிம்லா உடன் படிக்கை, **1974** ஆம் ஆண்டு இந்திய — அமெரிக்க உடன் படிக்கை, **1983** ஆம் ஆண்டு புதுடில்லி அணிசேரா மாநாட்டின் பிரகடனம் காமன் வெலத் பிரகடனம் என்பன இந்தியாவின் அயல்துறைக் கொள்கையின் முக்கியத்துவத்தைக் கோடிட்டுக் காட்டுகின்றன.

ஆக்கபூர்வமான நடுநிலைக்கொள்கையை இந்தியாவின் அயல் துறைக் கொள்கை என்பதை மறைந்த பிரதமர் காந்தி அடிக்கடி உலக அரங்கில் வலியுறுத்தி வந்திருக்கிறார்.

சமாதான இலட்சியத்தைக் கடைப்பிடிப்பது இந்தியாவின் முதலாவது கோட்பாடாகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அரசியல் உறவுகள், பொருளாதார உறவுகள் ஆகியவற்றில் சமத்துவத்தை உறுதிசெய்து போராடுதல் இந்தியாவின் இரண்டாவது கோட்பாடாகிறது.

நவீன காலனியாதிக்கம், ஆபிரிக்க நிற வெறிக் கொள்கைகளைக் கண்டிப்பது அதன் மூன்றாவது கோட்பாடாகிறது.

இந்தியா எந்தவொரு இராணுவக் கூட்டணியையும் சேர்ந்ததல்ல என்பதும் தெளிவுபடுத்தப்பட்டு விட்டது.

அண்டை நாடுகளுடன் நட்புறவு, பரஸ்பர பொருளாதார புரிந்துணர்வு என்பவற்றை வலுப்படுத்துவது இந்தியாவின் தலையாய இலசிட்ய மாகும்.

இத்தகைய ஜீவ சக்தி மிக்க அயலுறவுக் கொள்கையை முன்னெடுத்துச் சென்ற பெருமை பிரதமர் காந்தியையே சாரும். உலகச் சமாதானத்தைப் பேணிக்காப்பதற்கும், அமைதியான உலகை தாபிப்பதற்கும் பிரதமர் காந்தி வெளிநாட்டுக் கொள்கையை ஒரு கருவியாகப் பயன்படுத்தினார்.

அணுவாயுத உற்பத்திக்கு முடிவு கட்டி படைக்குறைப்பின் மூலம் உலக சமாதானத்தைக் காக்க வல்லரசுகள் வழிகாண வேண்டும் என்று ஆசியஜோதி நேரு அன்று ஐ. நா. சபையில் வலியுறுத்தினார். தந்தையின் ஆவலை மகள் பிரதமர் காந்தி அணிசேரா இயக்கத்தின் தலைமைத்துவப் பொறுப்பை ஏற்று அதன் மூலம் வல்லரசுகளிடம் கோரிக்கை விடுத்து வந்தார். இந்து மாக்கடல் பிராந்தியம் சமாதான மண்டலமாக வேண்டும் என்ற இந்தியாவின் உறுதிப்பாட்டை பிரதமர் காந்தி அடிக்கடி உலக அரங்கில் வலியுறுத்தி வந்தார்.

வல்லரசுகளுடனும், அண்டை நாடுகளுடனும் அவர் கொண்டிருந்த நட்புறவு இந்தியாவின் வெளிநாட்டுக் கொள்கையை துலாம்பரமாக எடுத்துக்காட்டின.

பிரதமர் காந்தி எல்லா நாடுகளுடனும் நட்புறவை வலுப்படுத்த வேண்டும் என்று அதிக அக்கறை கொண்டிருந்தார். அண்டை நாடான பாகிஸ்தானிலிருந்து ஏனைய நாடுகள் வரை அவர் கொண்டிருந்த உறவை ஆராயும் போது அதை தெளிவாக உணரமுடிகிறது.

## இந்திய - பாகிஸ்தான் உறவு

உபகண்டத்தில் நிலையான சமாதானம் ஏற்பட வேண்டுமாயின் இந்திய — பாகிஸ்தான் இருதரப்பு உறவில் சகஜநிலை அவசியம் என்பது உணரப்பட்டு விட்டது. இந்தியாவும், பாகிஸ்தா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

னும் அண்டை நாடுகளாகும். **1947** ஆம் ஆண்டு ஆகஸ்ட் **14**ஆம் திகதி இந்தியா பிரிட்டிஷாரிடம் இருந்து சுதந்திரத்தைப் பெற்றுக் கொள்வதற்கு முன்னர் பாகிஸ்தான் இந்தியாவின் ஒரு பகுதியாகவே இருந்தது. இந்தியாவின் சுதந்திரத்தைத் தொடர்ந்து பாகிஸ்தான் தனி நாடாக பரிணமித்தது. பாகிஸ்தான் என்ற தனிநாடு உருவாவதற்கு முஸ்லிம் லீக் தலைவர் காயிதே முஹம் தலி ஜின்னா நடத்திய போராட்டமே காரணம். முஸ்லிம் மக்களுக்கென ஒரு தனி நாடு அவசியம் என்பதை வலியுறுத்திய காயிதே முஹம்மதலி ஜின்னா தனது கோரிக்கையில் வெற்றி கண்டார்.

இந்தியாவும் பாகிஸ்தானும் வெவ்வேறு நாடுகளான பின்னர் ஏற்பட்ட வகுப்புக் கலவரம் இரு நாடுகளுக்கும் இடையில் மிகப் பெரும் விரிசலை ஏற்படுத்தின. அதன் பின்னர் காஷ்மீர் பகுதியை உரிமைகோருவதில் ஏற்பட்ட பிணக்கு **1949** ஆம் ஆண்டு இரு நாடுகளுக்கும் இடையில் யுத்தத்துக்கு வழி சமைத்தது. எதிர் காலத்திலும் இது போன்ற யுத்தம் சகோதர நாடுகளுக்கிடையில் ஏற்படலாகாது என்று விருப்பம் கொண்ட பிரதமர் நேரு **1949** டிசம்பர் **22** ஆம் திகதி யுத்த தவிர்ப்பு ஒப்பந்தத்துக்கு வருமாறு பாகிஸ்தானை அழைத்தார். எனினும் அந்த அழைப்பை பாகிஸ் தானிய அதிபர் லியாகத் அலிகான் மறுத்து விட்டார்.

அதன் பின்னர் மீண்டும் **1965** ஆம் ஆண்டு காஷ்மீர் விவகாரம் காரணமாக இந்திய — பாகிஸ்தான் யுத்தம் ஏற்படலானது. இந்த யுத்தம் மீண்டும் இரு நாடுகளையும் பாதித்தலாகாது என்ற பெருநோக்கில் மறைந்த இந்தியப் பிரதமர் லால்பகதூர் சாஸ்திரி யுத்தகவிர்ப்பு ஒப்பந்தத்துக்கு வருமாறு பாகிஸ்தானுக்கு அழைப்பு விடுத்தார். எனினும் அந்த அழைப்பை அன்றைய பாகிஸ்தானிய அதிபர் பீல்ட்மார்ஷல் அயூப்கான் மறுத்து விட்டார். ஆனாலும் சோவியத் பிரதமர் அலக் ஸிகொசிஜினின் பெரு முயற்சியினால் இரு நாடுகளுக்கும் இடையில் **1966** ஆம் ஆண்டு "தாஷ்கண்ட்" பிரகடனம் உருவாக வழியேற்பட்டது.

சரித்திர முக்கியத்துவம் வாய்ந்த தாஷ்கண்ட் பிரகடனத்தில் கைச்சாத்திடுவதற்காக இரு நாடுகளின் தூதுக்குழுக்களும் மாஸ்கோ வந்து சேர்ந்தன.

பாகிஸ்தானிய அதிபர் பீல்ட்மார்ஷல் அயூப்கான் தலைமையிலான குழுவும், இந்தியப் பிரதமர் லால்பகதூர் சாஸ்திரி தலைமையிலான குழுவில் பாதுகாப்பு அமைச்சர் வை. பி. சவான், வெளி விவகார அமைச்சர் சர்தார் சுவரண் சிங், வெளியுறவுச் செயலாளர் சி. எஸ். ஜா, பிரதமரின் கொள்கைச் செயலாளர் எல். கே. ஜா, உள்துறை அமைச்சின் செயலாளர் எல். பி. சிங், இந்திய இராணுவ ஜெனரல் பரமசிவன் குமாரமங்கலம், சோவியத்துக்கான இந்தியத் தூதுவர் டி. என். கௌல் ஆகியோரும், சோவி


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யத் குழுவில் பிரதமர் கொஸிஜின், வெளியுறவு அமைச்சர் குரோமிக் கோவ். பாதுகாப்பு அமைச்சர் சகலோவ் ஆகியோரும் இடம் பெற்றனர்.

இந்திய — பாகிஸ்தான் தூதுக்குழுனின் அபிப்பிராய பேதங்கள் களையப்பட்டு 1966 ஜனவரி 10 ஆம் திகதி தாஷ்கண்ட பிரகடனத்தில் இருநாட்டுத் தலைவர்களும் கைச்சாத்திட்டனர். இதற்கு அடுத்தப்படியாக இருநாடுகளின் விமானப் படைத் தளபதிகளின் சந்திப்பு 1966 பெப்ரவரி 16 ஆம் திகதி பெஷாவரில் ஆரம்பமானது. இந்திய விமானப்படைத் தளபதி எயர் சீப் மார்ஷல் அர்ஜீன்சிங், பாகிஸ்தான் எயர் மார்ஷல்நூர்கான் ஆகியோர் தாஷகண்ட பிரகடனத்தில் காணப்பட்ட உடன்பாடுகளை முன்னெடுத்துச் செல்வது தொடர்பான பேச்சு வார்த்தை நடத்தினார்கள். பிரதமர் லால்பகதூர் சாஸ்திரியின் மறைவைத் தொடர்ந்து பிரதமரான இந்திராகாந்தியும் யுத்ததவிர்ப்பு ஒப்பந்தத்தில் கைச்சாத்திட வருமாறு பாகிஸ்தானுக்கு அழைப்பு விடுத்தார். இந்த அழைப்பையும் பாகிஸ்தான் ஏற்றுக்கொள்ளவில்லை. ஆனால் சோவியத் பிரதமர் கொஸிஜின் 1968 ஆம் ஆண்டு ஏப்ரலில் பாகிஸ்தானுக்கு விஜயத்தை மேற்கொண்டிருந்த போது அதிபர் அயூப்கானின் வேண்டுகோளின் பேரில் 1 கோடி டாலர் பெறுமதியான ஆயுத தளபாடங்களை வழங்க இணக்கம் காணப்பட்டது. இந்த ஆயுத விற்பனையை இந்தியா எந்தக் கட்டத்திலும் ஆட்சேபிக்கவில்லை. மாறாக 1971 ஆம் ஆண்டு யுத்தமே இருநாடுகளுக்கும் இடையில் பெரிய விரிசலை தோற்றுவித்தது.

கிழக்குப் பாகிஸ்தான் விவகாரம் காரணமாக இரு நாடுகளுக்கும் இடையில் ஏற்பட்ட யுத்தம் 16 நாளில் முடிவுக்குக் கொண்டு வரப்பட்டது. 90 ஆயிரம் பாகிஸ்தானிய வீரர்கள் இந்திய இராணுவத்திடம் சரணடைந்தனர். இந்தியாவின் மேற்கு பிராந்திய படைத்தளபதி லெப்டினன்ட் ஜெனரல் ஜகஜித்சிங் அரோரா முன்னிலையில் பாகிஸ்தானிய தளபதி லெப்டினன்ட் ஜெனரல் டைகர் நியாஸி சரணாகதிப் பத்திரத்தில் கைச்சாத்திட்டார். வங்கதேசம் என்ற தனிநாடு உருவாக்கப்பட்டு 90 ஆயிரம் பாகிஸ்தானிய வீரர்களும் விடுதலையான பின்னர் 1972 ஆம் ஆண்டு சிம்லா உடன்படிக்கை கைச்சாத்தானது. இந்தியப் பிரதமர் திருமதி சாந்தியும், பாகிஸ்தானிய ஜனாதிபதி சுல்பிகார் அலி பூட்டோவும் உடன்படிக்கையில் கைச்சாத்திட்டனர்.

இவ்வாறு இரு நாடுகளுக்கும் இடையில் இருந்து வந்த உறவில் 1981 ஆம் ஆண்டு ஒரு விரிசல் ஏற்படலானது. பாகிஸ்தானுக்கான அமெரிக்காவின் ஆயுத விநியோகம் இரு நாடுகளுக்கும் இடையில் உறவில் தேக்கத்தை ஏற்படுத்தலானது. அமெரிக்காவிடமிருந்து 320 கோடி டாலர் பெறுமதியான ஆயுத, பொருளாதார உதவியைப் பெற்றுக் கொள்ளப் போவதாக பாகிஸ்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தான் 1981 செப்டெம்பர் 15 ஆம் திகதி இஸ்லாமாபாத்தில் அறிவித்தது. இது சம்பந்தமான நகல் பிரதியொன்றையும் பாகிஸ் தானிலிருந்த இந்தியத் தூதுவர் திரு. நட்வர்சிங்கிடம் பாகிஸ்தானிய வெளியுறவுச் செயலாளர் கையளித்தார். அதே வேளை புதுடில்லியிருந்து பாகிஸ்தானியதூதுவர் அப்துல்சத்தாரும் நகல் பிரதியொன்றை இந்திய வெளியுறவு செயலாளர் மகாராஜகுமார் ராஷ்கோத்ராவிடம் கையளித்தார். அமெரிக்காவின் ஆயுத உதவியின் பின்னரே இந்தியாவுடன் யுத்த தவிர்ப்பு ஒப்பந்தம் குறித்து ஆலோசனை நடத்தப்போவதாக பாகிஸ்தான் அறிவித்தது. இது சம்பந்தமாக அன்றைய வெளியுறவு அமைச்சர் ஆகாசாஹி 1981 அக்டோபர் 2 ஆம்திகதி ஐ. நா. சபையில் பேசும்போது"" இந்தியாவுடன் யுத்த தவிர்ப்பு ஒப்பந்தம் செய்ய உத்தேசம் இருப்பதாகச் சொன்னார். அதனைத் தொடர்ந்து நவம்பர் 22 ஆம் திகதி பாகிஸ்தானிய அரசாங்க உத்தியோக பூர்வ கடிதம் ஒன்றை இந்திய அரசாங்கத்துக்குச் எழுதியிருந்தது.

1982 ஜனவரி மாதம் பாகிஸ்தானிய வெளியுறவு அமைச்சர் ஆகாசாஹி இந்தியா வந்திருந்தபோது யுத்ததவிர்ப்புஒப்பந்தம் குறித்து விவாதிக்கப்பட்டது. அப்போது சர்ச்சையில் ஈடுபட்டுள்ள இரு நாடுகளுக்கும் இடையில் கூட்டு ஆணைக்குழுவுக்கான உத்தேச நகலை இந்திய அரசசாங்கம் 1982 ஜூன் மாதம் பாகிஸ்தானிய அரசாங்கத்துக்கு அனுப்பி வைத்தது. பாகிஸ்தானிய அரசின் பரிசீலனையின் பின்னர் கூட்டு ஆ. Cக்குழுவை ஏற்படுத்துவதற்கு இணக்கம் காணப்பட்டது. ஆயினும் 1983 ஆம் ஆண்டு மார்ச் 10 ஆம் திகதியே கூட்டு Cக்குழு நாயிக்கப்பட்டது. புதுடில்லி அணிசேரா இயக்க மாநாட்டில் பங்குபற்ற வருகை தந்திருந்த பாகிஸ்தானிய ஜனாதிபதி ஜியாஉல்ஹக் இந்திய ஜனாதிபதி ஜெயில் சிங்குடன் கூட்டு ஆ Cக்குழு உடன்படிக்கையில் கைச்சாத்திட்டார். இருநாடுகளுக்கும்இடையிலான உறவில் இது ஒரு மைல் கல்லாகும். அரசியல், பொருளாதார உறவில் இரு நாடுகளுக்கும் இடையில் சீர் குலைவை பிரதமர் இந்திராகாந்தி தனது இராஜதந்திர சாதுரியத்தினால் வென்றதற்கு இது ஒரு எடுத்துக்காட்டாகும். சுதந்திரத்தின் பின்னர் இரு நாடுகளுமே பிரிந்த காலத்திலிருந்து எவ்விதமான உடன்படிக்கைகளுக்கும் சாந்தியம் அற்ற நிலை இருந்து வந்தது. அதை மாற்றியமைத்து இரு நாடுகளுக்கும் இடையில் புதிய சாதனையை உருவாக்கிய பெருமை கூட பிரதமர் காந்தியையே சேரும். அண்டை நாடான பாகிஸ்தானுடன் இருதரப்பு உறவை விருத்தி செய்வதற்கு இதை விட வேறு எந்த சாதனையை பிரதமர் காந்தியினால் செய்து காட்ட முடியும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இந்திய - வங்கதேச உறவு

அயல் நாடுகளுடனான உறவை வலுப்படுத்துவதில் பிரதமர் காந்தி பதவியேற்ற காலத்திலிருந்தே முக்கிய சிரத்தை கொண்டிருந்தார். இது அவரது வெளிநாட்டுக் கொள்கையின் முக்கிய அம்சமாக இருந்தது. இந்த அடிப்படையிலேயே இந்தியாவினால் உருவாக்கிக் கொடுக்கப்பட்ட வங்கதேசத்துடன் பிரதமர் காந்தி நெருக்கமான உறவு கொண்டிருந்தார். வங்கதேசம் என்ற புதிய தேசத்தை 1971 டிசம்பர் 6 ஆம் திகதி இந்தியா அங்கீகரித்தது. டிசம்பர் 16 ஆம் திகதி இந்திய – பாகிஸ்தான் யுத்தம் முடிவுக்குக் கொண்டு வரப்பட்டு பாகிஸ்தானிய வீரர்கள் இந்தியாவிடம் சரணடைந்ததைத் தொடர்ந்து 1971 ஜனவரி 8 ஆம் திகதி வங்க தந்தை முஜிபுர் ரஹ்மான் சிறையிலிந்து விடுவிக்கப்பட்டார்.

ஜனவரி 20 ஆம் திகதி வங்கதேச ஜனநாயகக் குடியரசின் பிரதமராக முஜிபுர் ரஹ்மான் பதவியேற்றார். இவர் பிரதமரானதும் மார்ச் நடுப்பகுதியில் பிரதமர் காந்தி வங்கதேசத்துக்கு விஜயம் செய்தார். அன்பான வரவேற்பு பிரதமர் காந்திக்கு வங்கதேச மக்களால் அளிக்கப்பட்டது. இருநாடுகளுக்கும் இடையில் பொதுவான கூட்டுறவு ஜனநாயகக் கொள்கைகள், நட்புறவை வலியுறுத்தி மார்ச் 19 ஆம் திகதி நட்புறவு சமாதான உடன்படிக்கை கைச்சாத்தானது. இரு நாடுகளின் பிரதமர்களும் இதில் கைச்சாத்திட்டார்கள். இரு நாடுகளுக்கும் இடையிலான ராஜரீக உறவு இங்கிருந்தே ஆரம்பமானது. பிரதமர் காந்தி தனது விஜயத்தின்போது வங்கதேசத்துக்கு ஐ. நா. விலும். இதர சர்வதேச அமைப்புகளிலும் அங்கத்துவம் பெற்றுக் கொடுப்பதற்கு இந்தியா சகல முயற்சிகளையும் மேற்கொள்வதாக உறுதியளித்திருந்தார்.

நாடு புதிதாக விடுதலையடைந்ததும் அது பொருளாதார புனரமைப்பு நடவடிக்கைகளை எதிர்நோக்க வேண்டியதாயிற்று. எரி பொருள், மற்றும் உணவுப் பொருட்கள் பற்றாக்குறையும் அங்கு நிலவியது. நிர்வாக அலுவல்களிலும் வங்கதேசம் சிக்கலை எதிர்நோக்கியது. வங்கதேச அரசு இந்தியாவுக்கு விடுத்த வேண்டுகோளைத் தொடர்ந்து 23 ஐ. ஏ. எஸ். (இந்திய நிர்வாக சேவை) அதிகாரிகள் வங்க தேசத்துக்கு அனுப்பி வைக்கப்பட்டார்கள். பிரதமர் காந்தி காட்டிய சிரத்தையின் விளைவாகவே வங்கதேச நிர்வாக நடவடிக்கைகளுக்கு இந்திய அதிகாரிகளால் ஆலோசனையும், உதவியும் நல்கக் கூடியதாக இருந்தது. வங்கதேசத்தை உருவாக்கிக் கொடுத்ததுடன் தனது பணிமுடிவடைந்து விட்டதாக பிரதமர் காந்தி கருதவில்லை. அந்நாட்டின் பொருளாதார மறுசீரமைப்பிலும் அவர் அதிக சிரத்தை காட்டினார். வங்கதேச மக்கள் பட்டினியால் வாடும் நிலையை அவர் அனுமதிக்கவில்லை. இந்தியாவின் அவசர உதவியாக ஒரு லட்சத்து ஐம்பதா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யிரம் தொன் உணவு தானியத்தை வங்கதேசத்துக்கு அனுப்பி வைத்தார். மூலப்பொருள் கொள்வனவுக்கென 25 கோடி ரூபாவை பண உதவியாக வழங்கினர். வங்க தேசத்தின் விவசாய நடவடிக்கைகளுக்காக நாற்பதாயிரம் தொன் யூரியா உரப் பசளையை அன்பளிப்பாக பிரதமர் காந்தி வழங்கினர். அத்துடன் வங்க தேசத்தில் ரயில்வே அமைப்பு முறையை புரைமைப்பதற்காகாக 13 கோடி ரூபா உதவியும் வழங்கினர். இத்துடன் உதவிகளை பிரதமர் காந்தி நிறுத்திக் கொள்ளவில்லை. வங்கதேசத்தில் பொருளாதார மறுசீரமைப்புப் பணிகளுக்கென இருநூறு கோடி ரூபா பெறுமதியான உதவியை வழங்குவதாக அறிவித்தார். இரு நாடுகளுக்கும் இடையில் வர்த்தகத் தொடர்புகளை கவனிப்பதற்காக 1973 ஜூலை மாதம் வர்த்தக உடன்படிக்கையொன்றும் கைச்சாத்தானது.

இருநாடுகளுக்கும் இடையிலான அரசியல், பொருளாதார உறவில் மேலும் ஒரு கட்டமாக வங்க பிரதமர் முஜிபுர் ரஹ்மான் 1974 மே மாதம் ஐந்து நாள் விஜயத்தை மேற்கொண்டு புதுடில்லி வந்து சேர்ந்தார். இரு நாடுகளுக்கும் இடையில் பொருளாதார, அரசியல், புரிந்துணர்வில் திருப்திகரமான நிலை இருப்பதாக கூட்டறிக்கை வெளியிடப்பட்டது.

இவ்வாறாக இந்தியாவுக்கும், வங்காளதேசத்துக்கும் இடையில் உறவு வலுவடைந்து வரும் காலப்பகுதியிலேயே 1975 ஆம் ஆண்டு ஆகஸ்ட் 15 ஆம் திகதி வங்க தேசப் பிரதமர் முஜிபுர் ரஹ்மானும் குடும்பத்தவர்களும் படுகொலைக்குள்ளானதை பிரதமர் காந்தி ஆகஸ்ட் 16 ஆம் திகதி வன்மையாகக் கண்டித்தார். எனினும் வங்கதேசத்தின் உள்விவகாரங்களில் தலையிட விரும்பவில்லையென்பதை பிரதமர் காந்தி உறுதியாகக் குறிப்பிட்டார்.

பிரதமர் காந்தியின் காலப்பகுதியிலேயே கங்கை நதி நீர் பங்கீடு தொடர்பாக வங்கதேசத்துடன் உடன்பாடு காணப்பட்டது. இதற்கென கூட்டு ஆணைக்குழு ஒன்று அமைக்கப்பட்டு 1977 ஆம் ஆண்டு உடன்படிக்கை கைச்சாத்தானது. பிரதமர் காந்தி மீண்டும் 1980 ஆம் ஆண்டு பொதுத் தேர்தலில் வெற்றியீட்டி பதவிக்கு வந்த பின்னர் வங்கதேச அதிபர் லெப்டினன்ட் ஜெனரல் முஹம்மது எர்ஷாடுடன் இது தொடர்பாக பேச்சு நடத்தினர். பிரதமர் காந்தியின் காலத்திலேயே வங்கத்தேசத்துடன் இந்தியா கூட்டு பொருளாதார ஆணைக்குழுவை ஏற்படுத்திக் கொண்டது. வங்கதேசத்திலிருந்து இந்திய எல்லைக்குள் கள்ளக் குடியேற்றக்காரர்களது வருகையைத் தடுக்க முட்கம்பி வேலி அமைக்கும் திட்டமும் பிரதமர் இந்திரா காந்தியினுலேயே முன்வைக்கப்பட்டது. சிறிய நாடாக இருந்தால் என்ன பெரிய நாடானாலும் சரி சமர்த்தான வழிகளில் பிரச்சினைப் பிரதமர் காந்தி அணுகினர் என்பதை வங்கதேசத்துடனான விவகாரங்கள் ஊர்ஜிதம் செய்கின்றன. இந்திய – வங்கதேச உறவில் பிரதமர் காந்தி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒரு அசைக்க முடியாத தூணாக இருந்தார் என்பதை அவரது அரசியல் நிகழ்வுகள் துலாம்பரமாக எடுத்துக் காட்டுகின்றன.

## இந்திய - நேபாள உறவு

இந்தியாவின் இமயமலைச் சாரலில் அமைந்த நாடே நேபாளமாகும். இருநாடுகளுக்கும் இடையில் ஆன்மீக, சமய கலாசார தொடர்பு தொன்று தொட்டே இருந்து வருகிறது. இருநாடுகளிலும் இந்துக்களே பெரும்பான்மையோராக இருப்பதால் சமய வளர்ச்சியில் இரு நாடுகளும் சிறந்து விளங்குகின்றன. உண்மையில் சொல்லப் போனால் நேபாளத்தின் பாதுகாப்பு அரணாக விளங்குவதே இந்தியாவாகும். சுதந்திரத்தைத் தொடர்ந்து 1950 ஆம் ஆண்டு லோகசபையில் பேசிய மறைந்த பிரதமர் ஜவஹர்லால்நேரு, ""அண்டை நாடான நேபாளத்தில் பாதுகாப்பில் எமக்கு அக்கறை உண்டு. அதேவேளை எமது பாதுகாப்பிலும் நாம் சிரத்தைகொள்ள வேண்டியவர்களாக உள்ளோம்"" என்றார். சின்னஞ் சிறிய நாடான நேபாளத்தில் வெளியார் ஊடுருவல், ஆக்கிரமிப்பு இடம் பெறலாமென்ற அச்சம் இந்தியாவுக்கு அன்று இருந்தது. இதன் விளைவாகவே இருநாடுகளுக்கும் இடையில் நட்புறவு சமாதான உடன்படிக்கை 1950 ஜூலை 31 ஆம் திகதி கைச்சாத்தானது. அதன்பின்னர் 1964 ஆம் ஆண்டு இராணுவ உதவி உடன்படிக்கை கைச்சாத்தானது. ஏனைய நாடுகள் பல வற்றுடன் இந்தியா நட்புறவு, சமாதான உடன்படிக்கைச் செய்து கொண்டாலும் நேபாளத்துடன் செய்து கொள்ளப்பட்ட உடன்படிக்கை அதிசிறப்பு வாய்ந்ததாகவே கருதப்படுகிறது.

"" எந்தவொரு வெளிநாடும் நேபாளத்துக்கு எதிராக ஆக்கிரமிப்பு அச்சுறுத்தலை மேற்கொள்ள முனையுமானால் அதை முறியடிக்க இந்தியாவின் ஆலோசனை, ஒத்துழைப்பை நேபாளம் நாட முடியும். இரு நாடுகளுமே கூட்டாக இணைந்து வெளியாரின் அச்சுறுத்தலை விலக்கலாம். அதே வேளை நேபாளம் தனக்குத் தேவையான ஆயுதம், மற்றும் இராணுவ தளபாடங்களை இந்தியாவின் சம்மதத்துடனும், மேற்பார்வையுடனுமே வெளிநாட்டிலிருந்து தருவிக்க முடியும். இத்தகைய சிறப்பு ஏற்பாடுகளுக்கு வகைசெய்யும் விதத்திலேயே இரு நாடுகளுக்கும் இடையில் உடன்படிக்கை செய்து கொள்ளப்பட்டது. மறைந்த பிரதமர் நேரு, நேபாள மன்னர்களான திரிபுவன், மகேந்திரா ஆகியோருடன் இருநாடுகளுக்கும் இடையிலான உறவை வலுப்படுத்துவதில் அதிக அக்கறை காட்டினார். இந்த உறவை மேலும் ஒரு படி உயர்த்துவதில் மறைந்த பிரதமர் காந்தி அக்கறை காட்டினார்.

திருமதி காந்தி பிரதமராக பதவியேற்ற 1966 ஆம் ஆண்டில் அப்டோபர் மாதம் நேபாளத்துக்கு விஜயம் செய்தார். நேபாளத்தில் மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்துக்கு இந்தியாவின் உத



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வியாக நாற்பது கோடி ரூபாவை வழங்குவதாக உறுதி அளித்தார். இத்துடன் நிற்கவில்லை. மிகப் பெரும் கடதாசி ஆலையொன்றை நிர்மாணித்து தருவதாகவும் அறிவித்திருந்தார். எனினும் காலப் போக்கில் இரு நாடுகளுக்கும் இடையில் ஏற்பட்ட எல்லைத் தக நிர்மாணித்து தருவதாகவும் அறிவித்திருந்தார். எனினும் காலப் போக்கில் இரு நாடுகளுக்கும் இடையில் ஏற்பட்ட எல்லைத் தக ராறு, வர்த்தக உறவில் சீர்குலைவு என்பவற்றின் விளைவாக இந்திய எதிர்ப்பு துவேசம் நேபாளத்தில் தலை தூக்கியது. நேபாளத்தில் உள்ள இந்தியத் தூதரகத்தின் முன்னிலையில் ஆர்ப்பாட்ட ஊர் வலங்களும் இடம்பெறலாயின. இந்த சந்தர்ப்பத்தில் நேபாளம் இந்தியாமீது சந்தேகக் கண் கொண்டு நோக்கத் தொடங்கியது. மன்னர் மகேந்திரரின் ஆட்சியைக் கவிழ்க்கப் போராடும் கிளர்ச்சி யாளருக்கு இந்தியா மறைமுகமாக உதவுவதாக நேபாளம் சந்தே கித்தது.

இதே காலப்பகுதியில் நேபாளத்துடன் புதிய வர்த்தக தொடர்புகளை ஆரம்பிக்க விரும்பிய பிரதமர் காந்தி அன்றைய வெளியுறவு அமைச்சர் சர்தார் சுவரண்சிங்கை நேபாளத்துக்கு அனுப்பியிருந்தார். அதன் விளைவாக இநாடுகளுக்கும் இடை யில் **1971** ஆகஸ்ட் **13** ஆம் திகதி வர்த்தக உடன்படிக்கை கைச்சாத்தானது.

மன்னர் மகேந்த்திராவின் மறைவைத் தொடர்ந்து அவரது புதல்வர் விரேந்திரர் விக்ரம்ஷா **1972** ஆம் ஆண்டு மன்னராக முடிசூட்டப்பட்டார். **1973** ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் நேபா ளத்துக்கு பிரதமர் காந்தி விஜயத்தை மேற்கொண்டிருந்தார். ""நேபாளத்தின் அபிவிருத்தியிலும். பொருளாதார சுபிட்சத்தி லும் இந்தியா அதிக அக்கறை கொண்டிருப்பதாக பிரதமர் காந்தி மன்னரிடம் தெரிவித்தார். அதேவேளை மன்னர் ஆட்சியைக் கவிழ்க்கப் போராடும் கிளர்ச்சியாளருக்கு இந்தியா எவ்வழியிலும் உதவ மாட்டாது என்றும் பிரதமர் காந்தி உறுதியளித்தார். இதன் பின்னர் இரு நாடுகளுக்கும் இடையிலான உறவில் புதிய வளர்ச்சி ஏற்பட்டது. மீண்டும் **1980** பொதுத் தேர்தலில் ஆட் சிக்கு வந்த பிரதமர் காந்தி இருநாடுகளுக்கும் இடையில் சிறந்த நல்லுறவு தேவை என்பதை விரும்பினார். இருநாடுகளுக்கும் இடையில் பொருளாதார ஊக்குவிப்பு நடவடிக்கைகளுக்காக "" அமைச்சர் மட்டத்திலான கூட்டு ஆ Cக்குழு"" ஏற்படுத்தப் பட்டது. அதேவேளை நேபாளம் அமைதிமண்டலமாக வேண்டும். என்பதிலும் பிரதமர் காந்தி அதிக அக்கறை கொண்டிருந்தார். சிறிய நாடாக நேபாளம் இருந்த போதிலும் அதன் சுபிட்சத்தில் பிரதமர் காந்தி எவ்வளவு அக்கறை கொண்டிருந்தார் என்பதை இது எடுத்துக் காட்டுகிறது.

**பூட்டான் உறவு**

நேபாளத்தைப் போன்றே பூட்டானின் பொருளாதார வளர் ச்சியிலும் பிரதமர் காந்தி அதிக கவனம் செலுத்தினார். பூட்டா னில் முதலாவது பொருளாதாரத் திட்டக் காலப்பகுதிக்கு (1981–



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1987 137 கோடி ரூபாவை வழங்க இந்தியா முடிவு செய்தது. இதைத்தவிர பூட்டானின் மின்சாரத் திட்டம், தொழிற்றுறை வளர்ச்சிக்கும் இந்தியா உதவுமென அறிவித்துள்ளது.

## தென் கிழக்காசிய நாடுகளுடன் உறவு

அண்டை நாடுகளைப் போலவே தென்கிழக்காசிய நாடுகளுடனும் இருதரப்பு பொருளாதார உறவை விருத்தி செய்வதில் இந்தியா அக்கறை எடுத்தது. 1980 ஆம் ஆண்டு ஆட்சிக்கு வந்த பின்னர் பிரதமர் காந்தி இதில் முழு மூச்சாக ஈடுபட்டார். குறிப்பாக வியட்நாம், கம்பூச்சியா, மலேசியா, பிலிப்பைன்ஸ், நியூசிலாந்து, மாலைதீவு ஆகிய நாடுகளுடனும் கிழக்காசிய நாடுகளான ஜப்பான், சீனா, மொங்கோலியாவுடனும் மேற்காசிய நாடுகளான குவைத், ஈரான், பஹ்ரெய்ன், ஐக்கிய அரபு இராச்சியம், யேமன் குடியரசு, சிரியா, லெபனான், துருக்கி, இஸ்ரேல், அல்ஜீரியா, எகிப்து ஷியாராவுடனும் மற்றும் இதர ஆபிரிக்க நாடுகளுடனும் இந்தியா வர்த்தக, பொருளாதார நடவடிக்கையில் ஈடுபடலானது.

1982—1983 காலப்பகுதியில் மாத்திரம் 160 கோடி ரூபா பெறுமதியான பொருளாதார உதவிகளை வியட்நாமுக்கு இந்தியா வழங்கியுள்ளது. இதில் அரைவாசி கோதுமைத் தானியமும் ஏனைய உணவுப் பொருட்களுமாகும். இருநாடுகளுக்கும் இடையில் 1982 ம் ஆண்டு டிசம்பரில் வர்த்தக உடன்படிக்கையும் கைச்சாத்தானது. துருக்கியுடனான பொருளாதார, தொழில் நுட்ப கூட்டு ஒத்துழைப்பு உடன்படிக்கை 1983 ஆம் ஆண்டு கைச்சாத்தானது. இதன் மூலம் இருநாடுகளுக்கும் இடையில் கப்பல் சேவைக்கு வழிசெய்யப்பட்டது. அத்துடன் மேற்காசிய நாடுகளில் கட்டிட நிர்மாணத் தொழிலில் ஈடுபட்டுள்ள இந்திய நிறுவனங்களுக்கு கட்டிடப் பொருட்களை வழங்கவும் இந்த உடன்படிக்கையில் இணக்கம் காணப்பட்டது. இவ்வாறு சகல நாடுகளுடனும் வர்த்தக பொருளாதாரத் தொடர்புகளை அதிகரிப்பதில் பிரதமர் காந்தி தீவிரமாக இருந்தார் என்பதற்கு இதைவிட வேறு சான்று தேவையா?

## இந்திய-சோவியத் உறவு

இந்திய – சோவியத் உறவு காலத்தின் சோதனைகளில் தேறி நின்று இன்று அசைக்க முடியாத பலம் பெற்றுவிட்டது. இந்திய சோவியத் உறவு மிகவும் பழமையானது. சோவியத் யூனியன் – இந்தியாவின் மாபெரும் உற்ற நண்பன். இந்தியாவின் விவசாயம், பொருளாதாரம், தொழில்நுட்ப, விஞ்ஞான முன்னேற்றங்களில் சோவியத் யூனியனின் பங்களிப்பை குறைத்து மதிப்பிட முடியாது. அந்தளவுக்கு இந்தியாவின் முன்னேற்றத்துக்கு சோ சோவியத் யூனியன் அதிக ஒத்துழைப்பை நல்கி வந்துள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மறைந்த பிரதமர் ஆசியஜோதி நேருவின் காலத்திலும், பிரதமர் இந்திராவின் காலப்பகுதியிலும் இரு நாடுகளுக்கும் இடையிலான உறவு உன்னத நிலையை யடைந்திருந்தது.

இந்தியாவின் முதற் பிரதமர் நேரு சோவியத் புரட்சி மீது உயர்ந்த கண்ணோட்டம் கொண்டிருந்தார். மாபெரும் சோவியத் புரட்சிக்கு வித்திட்ட மேதை லெனினை புரட்சியின் சிறந்த தலைவராகவும் மேதையாகவும் வர்ணித்தார்.

1963 ல் லக்னோவில் இந்திய தேசிய காங்கிரஸ் மாநாட்டில் பேசிய பிரதமர் நேரு "" உலகத்தின் பிரச்சினைகளுக்கும், இந்தியாவின் பிரச்சிகளுக்கும் தீர்வுக்குமான ஒரே விடை சோஷலிசம் என்று மனமார நம்புகிறேன். வறுமை, பரந்த வேலை இல்லாத் திண்டாட்டம், இந்திய மக்களின் நிலைமை ஒடுக்கப்படுதல் ஆகியவற்றை முடிவு கட்டுவதற்கு சோஷலிசத்தைத் தவிர வேறு ஒரு வழியும் எனக்குத் தெரியவில்லை"" என்றார். சோசலிசக் கொள்கைக்கு இந்தியா மாறுவது தவிர்க்க முடியாதது என்பதை முதலில் அறிவித்த இந்தியத் தலைவர் நேருவேயாவர். இதன் காரணமாகவே சோவியத் கொள்கைகளில் அதிக பற்று கொண்டு இந்தியாவையும் சோசலிச வழியில் இட்டுச் சென்றார்.

தந்தையின் வழியையே பிரதமர் இந்திராவும் பின்பற்றினார். இருபதாம் நூற்றாண்டில் இந்தியாவின் பொருளாதார சாதனைகளுக்கும், மக்களின் முன்னேற்றத்துக்கும் சோவியத்தின் கொள்கைகள் பெரிதும் உதவ முடியும் என பிரதமர் இந்திரா நம்பினார். அதன் ஒரு பகுதியாகவே இருபது அம்சத் திட்டத்தை நடைமுறைப்படுத்தினார். சோவியத் யூனியனின் நட்பையும், ஒத்துழைப்பையும் பிரதமர் காந்தி வியந்து பாராட்டினார். அதுபற்றி பிரதமர் காந்தி குறிப்பிடுகையில், ""எங்கள் இந்திய புரட்சி தனக்கேயுரிய சொந்த வழியைப் பின்பற்றியது. ஆயினும் காலனி மக்கள் மற்றும் புதிதாக விடுதலையடைந்த மக்கள் ஆகியோரின் போராட்டங்களில் சோவியத் யூனியன் கொண்டிருந்த நல்லிணக்கமும், பரிவும் ஆரம்பத்திலிருந்தே புலனாகின. இத்தகைய பிரச்சினைகள் மற்றும் பிற சர்வதேச பிரச்சினைகள் சம்பந்தமாக இவைகளுக்கிடையிலும் ஒரே ரீதியான கண்ணோட்டம் இருந்து வந்துள்ளது. பரஸ்பர நல்லிணக்கத்தின் எல்லை இடையறாது விரிவடைந்துள்ளது. நமது உறவுக்கு ஒரு முழுமையான வடிவத்தை வழங்கி 1971 ல் நாம் செய்து கொண்ட ஒப்பந்தத்தில் இந்த உறவு புனித மடைந்தது. நமது நட்புறவைப் போலவே இந்த ஒப்பந்தமும் வேறு எந்த நாட்டுக்கும் எதிரானதல்ல. அதன் நோக்கமும், அதன் பயனும், உலகில் சமாதான சக்திகளையும் ஸ்திரத்தன்மையையும் பலப்படுத்துவதேயாகும்"" என்றார்.

இந்தியாவுக்கும் சோவியத்துக்கும் இடையிலான உறவு 15ஆம் நூற்றாண்டிலிருந்தே ஆரம்பம் என்றாலும் 1947 ஆம் ஆண்டி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

லிருந்தே ராஜ்யரீதியில் இருநாடுகளுக்கிடையில் அரசியல், பொருளாதார உறவுகள் பரிமாற்றம் பெற்றன. சோவியத் யூனியனில் முதலாவது இந்தியத் தூதுவராக திருமதி விஜயலக்ஷ்மி பண்டிட் 1947 ஜுன் 25 ல் நியமனம் பெற்றார். இது போன்று இந்தியாவுக்கான முதலாவது சோவியத் தூதுவராக கிறிஸ்நோவிகோவ் 1947 அக்டோபர் 23 ல் நியமனம் பெற்றார். இதிலிருந்தே இருநாடுகளுக்கும் இடையில் ராஜ்யஉறவு ஆரம்பமானது. பிரதமர் நேருவின் காலத்திலிருந்தே சோவியத்துடனான உறவையும் நட்பையும் வளர்ப்பதில் இந்தியா அக்கறை காட்டி வந்ததாயினும் பிரதமர் இந்திரா வின் காலத்தில் இருநாடுகளுக்கும் இடையில் உறவு நெருக்கம் அடைந்தது.

இந்திராகாந்தி முதற் தடவையாக 1953 ஆம் ஆண்டு சோவியத் யூனியனுக்கு விஜயம் செய்தார். அங்கு அவருக்கு அன்பான வரவேற்பு அளிக்கப்பட்டது. சோவியத் மக்களின் நாகரிகம், பண்பாடு, கலாசாரங்கள், மக்களின் வாழ்க்கைமுறை என்பன இந்திராவைப் பெரிதும் கவர்ந்தன. இதன் விளைவாக இந்திய — சோவியத் உறவு வளர்ந்தோங்க வேண்டும் என்பதில் கனவு கண்டார். குறிப்பாக ஆபத்தான காலங்களில் இந்தியாவுக்கு சோவியத் யூனியன் கைகொடுத்து வந்தது அவருக்கு அந்நாட்டின் மீது மேலும் பற்று உருவாகக் காரணமானது. நேருவின் காலப் பகுதியில் 1956 ஆம் ஆண்டு இந்தியாவின் இரண்டாவது ஐந்தாண்டு பொருளாதாரத் திட்டம் வகுக்கப்பட்ட நேரம் அது. இந்தியாவின் சமூக பொருளாதார முன்னேற்றத்திட்டங்களுக்கும் பொதுத்துறை நடவடிக்கைகளுக்கும் நேரு அமெரிக்காவிடமும், உலக வங்கியிடமிருந்தும் நிதி உதவியை எதிர்பார்த்தார். எனினும் இறுதித்தறுவாயில் அது கைகூடாததைத் தொடர்ந்து சோவியத் யூனியன் இந்தியாவிற்கு கைகொடுத்து உதவியது.

இந்தியாவுக்கு சோவியத் யூனியனின் உதவி அத்துடன் நிற்கவில்லை. லால்பகதூர் சாஸ்திரியின் மறைவைத் தொடர்ந்து பிரதமராகப் பதவியேற்ற இந்திரா 1966 ஜுலை 12ஆம் திகதி சோவியத் யூனியனுக்கு விஜயம் செய்தார். சோவியத் மக்களின் மாபெரும் வரவேற்பு தவப்புதல்விக்கு காத்திருந்தது. பிரதமர் காந்தியின விஜயத்தின் விளைவாக இந்தியாவின் நான்காவது ஐந்தாண்டு காலத் திட்டத்துக்கு 830 கோடி ருபா சோவியத் உதவி கிடைத்தது. இது இந்திராவின் காலப்பகுதியில் கிடைத்த ஆகப்பெரிய வெளிநாட்டு உதவியாகும்.

இதன் பின்னர் 1969 மே மாதம் இந்திய ஜனாதிபதி சாகிர் ஹுசைனின் மரணச்சடங்கில் கலந்துகொள்ள வருகைதந்திருந்த சோவியத் பிரதமர் அலக்சிகொசிஜின் இந்தியாவுக்கு ஏற்படும் எந்தவொரு வெளிநாட்டு அச்சுறுத்தலையும் முறியடிக்க சோவியத் யூனியன் உறுதியாக இருப்பதாகச் சொன்னார். இது இந்தியாவின் பாதுகாப்புத்துறைக் கொள்கைக்கு ஒரு வகையில் தைரியம் ஊட்டியது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தாஷ்கண்ட பிரகடனம்

இந்தியாவின் பொருளாதார விவகாரங்களில் கவனம் செலுத்தத் தொடங்கிய சோவியத் யூனியன் இந்தியாவின் அரசியல் நெருக்கடி பிரச்சினைகளின் போது உலக அரங்கில் குரல்கொடுத்தே வந்துள்ளது. 1965 ஆம் ஆண்டில் காஷ்மீர் விவகாரம் தொடர்பாக இந்தியாவுக்கும் – பாகிஸ்தானுக்கும் இடையில் மீண்டும் யுத்தம் ஏற்படலானது. இருநாடுகளுமே எல்லைகளுக்கு உரிமை கோரின. இந்தியாவின் ஒரு பகுதி பாகிஸ்தான் வசமும், பாகிஸ்தானின் எல்லையில் ஒரு பகுதி இந்தியாவின் வசமும் ஆகின. இந்தப்பிரச்சினைக்கு முடிவுகாணப்பட வேண்டும் என்று விரும்பியது இந்தியா. மீண்டும் இது போன்று யுத்தம் எதிர்காலத்தில் ஏற்படாதவாறு உபகண்டம் அமைதியாக வேண்டும் எனக் கருதினார் சோவியத் பிரதமர் அலக்ஸி கொஸிஜின்.

இதற்கென ""தாஷ்கண்ட்"" பிரகடனத்தில் கைச்சாத்திட வருமாறு இந்தியப் பிரதமர் சாஸ்திரி, பாகிஸ்தானிய அதிபர் ஜெனரல் அயூப்கானுக்கு பிரதமர் கொஸிஜின் அழைப்பு விடுத்தார். இரு நாட்டுத் தலைவர்களும் தத்தம் பிரச்சினைகளுக்கு தீர்வு காணுமுகமாக 1966 ஜனவரி 10 ஆம் திகதி தாஷ்கண்ட் பிரகடனத்தில் கைச்சாத்திட்டனர். இவ்வாறு சர்ச்சைக்குரிய நெருக்கடிகளின் போது சோவியத் யூனியனின் உதவி இந்தியாவுக்கு கிடைக்கத் தவறவில்லை.

1971 ஆம் ஆண்டு பொதுத்தேர்தலில் பிரதமர் திருமதி காந்தி தலைமையிலான காங்கிரஸ் கட்சி வெற்றியீட்டியதும் அன்றைய பிரதமரான அலக்ஸிகொஸிஜின் அதை ""வரலாற்று பெருமை மிக்க வெற்றி"" என்று வர்ணித்தார். பிரதமர் காந்தி இந்துமாக்கடல் அமைதி மண்டலமாக வேண்டும். கரையோர நாடுகள் சுதந்திரம் பெற்ற நாடுகளாக விளங்க வேண்டும் என்ற வலியுறுத்தி வந்த கோரிக்கையை சோவியத் யூனியன் ஆதரித்தது.

1971 ஆம் இண்டு வங்கதேச விவகாரத்தின் போது பிரதமர் இந்திரா காந்தியின் நிலைப்பாட்டை சோவியத் யூனியன் வரவேற்றது. கிழக்குப் பாகிஸ்தானில் இலட்சக்கணக்கான மக்கள் கொல்லப்படும்போது பிரதமர் காந்தி அதற்கு எதிராக குரலெழுப்பினார். மனிதாபிமான ரீதியில் உதவியும் நல்கினார். கிழக்குப் பாகிஸ்தானிய மக்களைக் காப்பற்றுவதற்காக இந்தியா படையெடுப்பு நடத்தியபோது ஐ. நா. சபையில் அமெரிக்க, பாகிஸ்தானிய பிரதிநிதிகள் காரசாரமாக இந்தியாவைக் கண்டித்தார்கள். இந்தியாவின் நிலைப்பாடை வலியுறுத்தி ஐ. நா. பாதுகாப்புச் சபையில் வீட்டோ அதிகாரத்தைப் பாவித்த நாடு சோவியத் யூனியனாகும். அதன் விளைவாகவே அமெரிக்கா வங்கதேச விவகாரத்தில் அடங்கவேண்டி ஏற்பட்டது. இதிலிருந்து பிரதமர் இந்திராவின் உறுதிப் பாட்டை சோவியத் யூனியன் ஏற்று அங்கீகரித்திருப்பது புலனாகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1971 ஆம் ஆண்டு செய்து கொள்ளப்பட்ட இந்திய – சோவியத் நட்புறவு உடன்படிக்கைஇநாடுகளினதும் அரசியல், பொருளாதார உறவில் ஒரு மைல் கல்லாகும். அதே ஆண்டில் கைச்சாத்தான இந்திய – எகிப்து உடன்படிக்கை, இந்திய வியட்நாமிய உடன்படிக்கையைவிட இந்திய – சோவியத் உடன்படிக்கை தனித்துவம் பெற்றுக் காணப்படுகிறது.

சோவியத் ஜனாதிபதி மறைந்த லியோனிட் பிரெஷ்னேவ் 1973 ஆம் ஆண்டு நவம்பரில் இந்தியாவுக்கு விஜயம் செய்திருந்தார். அப்போது அவர் ஆசியாவின் கூட்டு பாதுகாப்புக்கான யோசனையொன்றையும் முன் வைத்தார். அந்த யோசனையை முன்னெடுத்துச் செல்வதில் பிரதமர் காந்தி அதிகசிரத்தை கொண்டிருந்தார்.

பிரதமர் காந்தி ஆப்கானிஸ்தானிய விவகாரத்தில் மௌனம் சாதித்ததாகவே உலக அரங்கில் பல தலைவர்கள் குறை கூறி வந்திருக்கிறார்கள். இந்திய – சோவியத் உறவு வலுவடைந்து வந்தது உலக அரங்கில் இந்தியா ஒரு தீவிர சோவியத் சார்பு நாடு என்று சந்தேகத்தையே தோற்றுவித்தது. ஆனாலும் நிலைமை அப்படியல்ல என்பதை பிரதமர் காந்தி தெளிவாகச் சுட்டிக் காட்டியிருந்தார்.

மறைந்த ஜனாதிபதி பிரெஷ்னேவின் காலப்பகுதியிலேயே 1979 ஆம் ஆண்டு சோவியத் படைகள் ஆப்கனிஸ்தானில் ஊடுருவின. 1982 ஆம் ஆண்டு பிரதமர் காந்தி அமெரிக்கா சென்ற போது ஆப்கானிஸ்தானில் இருந்து சோவியத் படைகளை வாபஸ் பெறுமாறு ஏன் கோரவில்லையென்று கேட்கப்பட்டது. பிரதமர் காந்தி அதற்கு சூட்சுமமாக பதிலளித்தார். "ஆப்கானிஸ்தானிலிருந்து சோவியத் படைகள் உட்பட வெளியாரின் தலையீடுகள் நிறுத்தப்பட வேண்டும் என்றே கோருகிறோம். சோவியத் படைகள் ஆக்கானிஸ்தானிக்குள் ஊடுருவுமுன்னர் வேறு நாடுகளின் ஊடுருவல் இருக்க வில்லையா என்றும் கேள்வி எழுப்பினார். இக்கேள்வி மூலம் அயல் நாடுகளின் தலையீடு அங்கு இருந்ததை பிரதமர் இந்திரா சுட்டிக் காட்டி விட்டார்.

இந்திரா காந்தி தனது காலப்பகுதியில் சோவியத் யூனியனுடன் இந்தியாவை நன்கு பிணைத்துவிட்டார். வலுவான உறவுக்கு வழிசமைத்துச் சென்றார். அதன் விளைவாகவே இன்றும் இந்திய – சோவியத் உறவு மேலும் தழைத்தோங்கி வளருகிறது.

### இந்திய — அமெரிக்க உறவு

அமெரிக்கா ஓர் மாபெரும் ஜனநாயக நாடு. தேர்தல் மூலம் சட்டபூர்வமாக பதவிக்கு வரும் ஆட்சிகளை அங்கீகரிப்பதும், அத்தகைய அரசுகளை ஆதரிப்பதுமே அதன் வெளிநாட்டுக் கொள்கையாகும். இந்தியாவும் தெற்காசியாவில் நீண்ட ஜனநாயக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாரம்பரிய முறையுடைய நாடாகும். அணிசேராமை என்ற ஆக்க பூர்வமான நடுநிலைக் கொள்கையே அதன் வெளிநாட்டுக் கொள்கையாகும். இந்த இரு நாடுகளுக்கும் இடையில் வலுவான அரசியல், பொருளாதார, ராஜரீக உறவு இருப்பது பொதுவாக உலக அமைதிக்கே நன்மை பயக்கும். இந்த பேருண்மையை புரிந்தவர் பிரதமர் இந்திரா காந்தி.

முன்னைய அமெரிக்க ஜனாதிபதிகளாக இருந்த ஹரி எஸ். ட்ரூமன் (1945 — 1953], டுவைட் டேவிட் ஐசனோவர் (1953 — 1961] ஜோன் எப். கென்னடி (1961 — 1963] ஆகியோர் இந்தியாவின் முதலாவது பிரதமர் ஜவர்லால் நேருவை இருபதாம் நூற்றாண்டின் மாபெரும் தேசிய விடுதலைப் போராட்டவாதி என்ற கருத்தை ஏற்றுக் கொண்டார்கள். நேருவின் உலகளாவிய மனிதநேயம், உலக சமாதானத்தின் மீதுள்ள பற்று, ஆளுமை என்பன அவரை அமெரிக்க நிர்வாகங்களின் மீது நம்பிக்கையை ஏற்படுத்தியிருந்தன. இந்த அடிப்படையிலேயே நேருவின் புதல்வி இந்திராவும் அமெரிக்காவுடன் இந்தியாவின் தொடர்பை இறுகச் செய்வதில் அதிக பிரயாசை கொண்டிருந்தார். 1966 ஆம் ஆண்டு ஜனவரியில் பிரதமரானதும் அவரது முதலாவது வெளிநாட்டு விஜயம் மார்ச் மாதம் அமெரிக்காவுக்கே அமைந்தது. அன்றைய அமெரிக்க, ஜனாதிபதி லின்டன் ஜோன்சன் பிரதமர் இந்திராவுக்கு அன்பான வரவேற்பு அளித்தார். இந்தியாவின் அன்றைய பொருளாதார நெருக்கடியைச் சமாளிக்குமுகமாக 80 லட்சம் தொன் தானியம் அமெரிக்க பி. எல். 480 உதவித் திட்டத்தின் கீழ் வழங்கப்பட்டது. இதனைத் தொடர்ந்து 1967 ஆம் ஆண்டு இறுதியில் 60 லட்சம் தொன் தானியம் அமெரிக்காவிலிருந்து தருவிக்கப்பட்டது. இதற்கு மேலாக வெளிநாட்டுக் கடன் பெறுவதற்கும் இந்தியா உடன்படிக்கையில் கைச்சாத்திட்டது. இதன் விளைவாக அமெரிக்காவிடமிருந்து 1251 கோடி ரூபா கடனுதவி பெற்றுக் கொள்ளப்பட்டது. ஜனாதிபதி லின்டன் ஜோன்சன் நிர்வாகத்தில் இந்திராவின் பாதுகாப்புத்துறையை நவீனமயப்படுத்துவதற்கு 50 கோடி டாலர் இராணுவ உதவி கிடைக்கும் என இந்திரா எதிர்பார்த்திருந்தார். எனினும் 8 கோடியே 20 இலட்சம் டாலர் பெறுமதியான இராணுவ உதவியே இந்தியாவுக்குக் கிடைத்தது. ஜனாதிபதி ஜோன்சன் நிர்வாகத்துடன் இந்தியாவின் உறவு ஒருவாறு வலுவடைந்து வந்த காலப்பகுதியிலேயே அமெரிக்காவில் தேர்தல் நடைபெற்று குடியரசுக் கட்சியைச் சேர்ந்த ரிச்சட் நிக்சன் (1969 — 1974] ஜனாதிபதியானார்.

அமெரிக்க ஜனாதிபதிகளான ஹரி ட்ரூமன், ஐசனோவர், ஜோன் எப். கென்னடி, லின்டன் ஜோன்சன் ஆகியோர் காலப்பகுதியில் கட்டி வளர்க்கப்பட்ட இந்திய அமெரிக்க உறவால் ஜனாதிபதி நிக்சன் பதவிக்கு வந்ததும் ஒரு தொய்வு ஏற்படலானது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாகிஸ்தானை தெற்காசியாவில் ஒரு பலம் வாய்ந்த நாடாக்கும் முயற்சியில் ஜனாதிபதி நிக்சன் ஈடுபட்டு வந்தார். அதே வேளை இந்து மாகடல் பிராந்தியத்தை அமெரிக்க ஏரியாக்குவதும் அவரது நோக்கமாக இருந்தது. ஜனாதிபதி நிக்சன் நிர்வாகத்தின் மீது பிரதமர் காந்தி உட்பட மூன்றாம் மண்டல நாடுகளின் தலைவர்கள் உயர்வான கணிப்பைக் கொண்டிருக்கவில்லை. ஏனெனில் 1972 டிசம்பர் கிறிஸ்மஸ் காலப்பகுதியில் வியட்நாம் மீது அமெரிக்கா நடத்திய குண்டுத்தாக்குதல், கம்பூச்சியா மீதான அமெரிக்காவின் மிலேச்சத்தனமான நடவடிக்கைகள், அரபுலகை பலமிழக்கச் செய்ய எடுத்த நடவடிக்கைகள் என்பன மீது மூன்றாம் மண்டல நாடுகளுக்கு வெறுப்பை ஏற்படுத்தின.

குறிப்பாக நிக்சன் நிர்வாகத்தின் மீது இந்தியா வெறுப்பு கொள்வதற்கு 1971 ஆம் ஆண்டு இடம்பெற்ற வங்கதேச விவகாரமே காரணம் எனலாம். வங்க தேசத்தை 1971 ஆம் ஆண்டு டிசம்பர் 6 ஆந் திகதி இந்தியா ஆதரித்தது. கிழக்குப் பாகிஸ்தானில் தோன்றிய நெருக்கடி நிலையைத் தளர்த்த இந்தியா எடுத்த எவ்வித முயற்சிகளும் பலனளிக்காத நிலையில் பாகிஸ்தான் இந்தியா மீது போர் தொடுக்க ஆரம்பித்தது. தருணம் பார்த்திருந்த அமெரிக்க நிர்வாகம் பாகிஸ்தானுக்கு தாராளமாக ஆயுதவிநியோகத்தை அதிகரிக்க ஆரம்பித்தது.

7 கோடியே 50 இலட்சம் கிழக்குப் பாகிஸ்தானிய மக்கள் சுதந்திரம் மறுக்கப்பட்டு அடக்கி ஒடுக்கப்பட்டார்கள். சுமார் ஒரு கோடி மக்கள் வீடிழந்து அகதிகளாகினர். லட்சக் கணக்கானோர் கொன்று குவிக்கப்பட்டார்கள். பல லட்சம் மக்கள் இந்தியாவை நோக்கி அகதிகளாக ஓடி வந்தனர். இந்த நெருக்கடி நிலையைத் தளர்த்த நிக்சன் நிர்வாகம் எவ்வித நடவடிக்கையும் எடுக்கவில்லை. கிழக்கு பாகிஸ்தான் விவகாரத்துக்கு அரசியல் தீர்வு காண முழு ஒத்துழைப்பு நல்க இந்தியா முயன்றது. எனினும் பாகிஸ்தானோ அதன் ஆதரவு நாடான அமெரிக்காவோ செவி சாய்க்கவில்லை. பாகிஸ்தானியர்கள் கிழக்குப் பாகிஸ்தானில் தமது வன்முறைகளை நிறுத்தவில்லை. இந்திய எல்லைகளிலும் அத்து மீறிப்பிரவேசித்து விமானத் தாக்குதல்களை நடத்தினார்கள். இதனைத் தொடர்ந்து 1971 டிசம்பர் 3 ஆம் திகதி இந்தியா பாகிஸ்தானுடன் யுத்தப் பிரகடனம் செய்தது. 13 நாள் நடைபெற்ற யுத்தத்தில் 90 ஆயிரம் பாகிஸ்தானிய வீரர்கள் இந்தியாவிடம் சரணடைந்தார்கள். பாகிஸ்தானின் மேற்கு பிராந்திய படைத்தளபதி லெப்டினன்ட் ஜெனரல் டைகர் நியாஸி சரணகதி பத்திரத்தில் கைச்சாத்திட்டார்.

இந்தியா – பாகிஸ்தான் யுத்தம் ஒரு பக்கத்தில் உச்ச கட்டத்தை அடைந்து கொண்டிருக்கும் போது அமெரிக்க ஜனாதிபதி நிக்சன் நிர்வாகம் தனது அரசியல் சாணக்கியரான இராஜாங்க அமைச்சர் கலாநிதி கிஸிங்கர் சகிதம் ஒரு புதிய யுத்தியைக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கையாண்டது. அதாவது 99 ஆயிரம் தொன் எடையுடைய அமெரிக்க எழாவது கடற்படையான ""என்டர் பிறைசஸ்"" விமானத்தாங்கிக் கப்பலை வங்காள விரிகுடாவுக்கு அனுப்பி வைத்தது. இதன் மூலம் இந்தியாவை மிரட்டி அடிபணியவைக்கலாம் என்று ஜனாதிபதி நிக்சன் கனவு கண்டிருந்தாராயினும் பிரதமர் இந்திராவிடம் அது பலிக்கவில்லை.

மாறாக அமெரிக்ககப்பல் வங்காள விரிகுடாவினுள் நுழைந்தால் தாக்குதல் நடத்தப்படும் என்று இந்தியத் தரப்பில் கடும் எச்சரிக்கைகளுள்ளாக் கப்பட்டது. அந்தளவுக்கு வீரத்துணிவுடன் உடன் காரியமாற்றியவர் பிரதமர் இந்திரா. அவர் வங்கதேச விவகாரத்தில் காட்டிய துணிவும், நெஞ்சுறுதியும் மெச்சத் தக்கது.

## கிஸிங்கரின் பாராட்டு

வங்கதேச விவகாரத்தில் பிரதமர் இந்திராவும், அவரது சகாக்களும் கையாண்ட புத்திசாதுரியமான இராஜதந்திர நடவடிக்கைகளை அமெரிக்க முன்னாள் இராஜாங்க அமைச்சர் கிஸிங்கர் பாராட்டியுள்ளார். அமெரிக்க நிர்வாகம் தமது தோல்வியை ஒப்புக்கொள்ளும் அளவுக்கு பிரதமர் இந்திராவின் இராஜதந்திரப் பணி செல்வாக்கு பெற்றுள்ளது.

முன்னாள் இராஜாங்க அமைச்சர் கலாநிதி கிஸிங்கர் ""வெள்ளை மாளிகை நினைவுகள்"" என்ற தனது நூலில் ""ஒவ்வொரு முறையும் வங்காள தேச விவகாரத்தில் இந்திராகாந்தியும் அவரைச் சுற்றியுள்ள ஆலோசகர்களும் எங்கள் திட்டங்களையும் மிஞ்சிச் செயற்பட்டார்கள். நீர்த்தாட்சன்யமில்லாமல் விசயங்களை அணுகினர்கள். எங்களுடைய மிரட்டல்களோ, உத்திகளோ பிரதமர் இந்திராவிடம் பலிக்கவில்லையென குறிப்பிட்டுள்ளார். இப்படி குறிப்பிட்டதிலிருந்து அடிபட்ட, அவமானப்பட்ட மனக்காயம் தென்படுவதுடன் அவர் இந்திரா காந்திக்கு கொடுத்த மதிப்பும், மரியாதையும் நன்றாகப் புரிகிறதல்லவா? இந்தளவுக்கு இந்தியாவின் புகழையும், பெருமையையும் உயர்த்தி விட்டார் பிரதமர் காந்தி.

இதன் பின்னர் மீண்டும் 1980 பொதுத் தேர்தலில் ஆட்சியைக் கைப்பற்றி பிரதமரான திருமதி காந்தி அப்போதைய ஜனாதிபதி ஜிம்மி கார்டர் நிர்வாகத்துடனும் உறவுகளை வளர்ப்பதில் அதிக சிரத்தை காட்டினர். 1980 ஆம் ஆண்டு தாராபூர் அணுசக்தி நிலையத்துக்குத் தேவையான யுரேனியம், மற்றும் ஆலை நிர்மாணப்பணிகளை முடிப்பதற்கு உடன்படிக்கையொன்றும் கைச்சாத்தானது. இதே ஆண்டில் 10 கோடி ரூபா பெறுமதியான பொருட்களும் இந்தியாவுக்கு உதவியாகக் கிடைத்தன. பிரதமர் இந்திரா நாட்டு நலன், பொருளாதார முன்னேற்றத்தில் அதிக அக்கறை கொண்டிருந்ததன் விளைவாக அமெரிக்க நிர்வாகங்களுடன் நல்லுறவை வளர்த்துக் கொள்வதிலேயே அக்கறை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காட்டினர். இதன் பின்னர் ஜனாதிபதி டொனால்ட் றேகன் 1980 ல் பதவியேற்ற பின்னர் இந்திய – அமெரிக்க உறவில் புதிய வளர்ச்சிப் பாதையை ஏற்படுத்துவதில் பிரதமர் காந்தி அக்கறை கொண்டிருந்தார். 1981 ஆம் ஆண்டு அவுஸ்திரேலியா வில் இடம்பெற்ற கான்கடன் உச்சி மாநாட்டில் பிரதமர் இந்திரா ஜனாதிபதி றேகனுடன் இருதரப்பு உறவுகளை வலுப்படுத்த வேண்டிய அவசியம் குறித்து விவாதித்தார். அந்த சந்திப்பு இரு நாடுகளுக்கும் இடையில் சிறந்த தூதுவர்களை நியமிப்பதன் மூலம் வெற்றிக்கு வழி சமைத்தது.

இந்தியாவின் சிறந்த இராஜதந்திரியான கே. ஆர். நாரா யணன் வாஷிங்டனுக்கான தூதுவராகவும், ஹரிபரன்ஸ் புது டில்லி தூதுவராகவும் நியமிக்கப்பட்டார்கள். 1980 – 1982 காலப்பகுதியில் பெற்றோலியம் இரசாயனத் துறையில் அநேக கூட்டு முயற்சிக் கம்பனிகள் இரு நாட்டு முதலீட்டாளர்களா லும் உருவாக்கப்பட்டன. 1957 — 1980 காலப்பகுதியில் 6232 கைத்தொழில் கூட்டு முயற்சிகளுக்கு உடன்படிக்கைகள் கைச் சாத்திடப்பட்டன. இவற்றில் இருபது வீதம் அமெரிக்க கம்பனி களாகும்.

இந்திய — அமெரிக்க உறவு வளர்ச்சியடைவதற்கு பாகிஸ் தானுக்கான அமெரிக்காவின் ஆயுதவிற்பனை தடையாய் இருந் ததை பிரதமர் இந்திரா பல தடவை அமெரிக்கத் தலைவர்களுக் கும், உலகத் தலைவர்களுக்கும் சுட்டிக்காட்டியிருந்தார். ஜனாதி பதி றேகன் பதவிக்கு வந்ததன் பின்னரே பாகிஸ்தானுக்கு 320 கோடி டாலர் பெறுமதியான ஆயுத உதவியை வழங்க முடி வானது. மிகவும் சக்தி வாய்ந்த எப்—16 ரக யுத்த விமானங் களும். ஹர்பூன் ஏகவுணைகளும் பாகிஸ்தானுக்கு வழங்கப்படு வதை பிரதமர் இந்திரா 1982 ஜூலை மாதம் அமெரிக்காவுக்கு மேற்கொண்டிருந்த விஜயத்தின் போது ஜனாதிபதி றேகனிடமே சுட்டிக்காட்டியிருந்தார். பாகிஸ்தானுக்கு அமெரிக்கா ஆயுத விநியோகத்தை துரிதப்படுத்தியபோதிலும் இந்திய – அமெரிக்க உறவை சீராக்குவதிலேயே பிரதமர் இந்திரா அக்கறை கொண் டிருந்தார். இந்தியா ஒரு அணிசேரா நாடு. அமெரிக்கா மா பெரும் வல்லரசு. என்றாலும் ஜனநாயகக் கோட்பாடுகளை மதித்து ஒழுகும் நாடுகள் என்ற ரீதியில் பிரதமர் இந்திரா வினால் இருநாடுகளுக்கும் இடையிலான உறவு வலுவடைந்தது.

### இலங்கை — இந்திய உறவு

இந்துமாகடலில் முத்தைப் போன்று அமைந்திருக்கும் இலங் கைத் தீவுக்கும், இந்தியாவுக்கும் இடையிலான சமய நாகரீக கலாசார தொடர்பு தொன்மையானது தமிழரும், சிங்களவர் களும் இந்தியாவிலிருந்தே வந்தனர். இந்தியாவின் தேச விடு தலைப் போராட்டம் உச்சகட்ட நிலையிலிருந்து 1947 ஆகஸ்ட்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

14 ஆம் திகதி சுதந்திர தேவி அந்த மண்ணினில் ஜனித்தாள். தனைத்தொடரிந்து இங்கும் ஆங்கிலேய ஆட்சியாளருக்கு எதிரான போராட்டம் உச்சநிலையடைந்து 1948 பெப்ரவரி 4 ஆம் திகதி சுதந்திரம் கிடைத்தது.

இருநாடுகளுக்கும் சுதந்திரம் கிடைப்பதற்கு முன்னரேயே மக்களுக்கிடையில் வலுவான நட்புறவு, கலாசாரத் தொடர்பு இருந்து வந்துள்ளது. ஆங்கிலேயர் ஆட்சிக்காலத்தில் தேயிலைப் பயிர்ச்செய்கைக்காக தென்னிந்தியாவிலிருந்து அழைத்துவரப்பட்டவர்கள் மலையகத்தில் குடியேற்றப்பட்டார்கள். தென்னிந்திய தமிழர்களை ஆங்கிலேயர்கள் இலங்கைக்கு மாத்திரம் அழைத்து வந்து குடியேற்றவில்லை.

மொரிஷியஸ், மலேசியா, தென்னாபிரிக்கா, கானா, இந்தோனேசியாவிவுக்கும் அழைத்துச் சென்று தோட்டத் தொழிற்றுறையில் ஈடுபடுத்தினார்கள்.

இவ்வாறு இந்திய மக்கள் குடியேற்றப்பட்ட நாடுகளுக்கும். இந்தியாவுக்கும் இடையில் காலப் போக்கில் இறுக்கமான உறவு வளர்ந்தோங்கவேண்டிய நிலை உருவானது. ஆங்கிலேயரால் அழைத்துச் செல்லப்பட்டு குடியேற்றப்பட்ட இலட்சக்கணக்கான மக்கள் அந்தந்த நாடுகளில் இந்திய வம்சாவளியினரானார்கள். அந்த வகையிலேயே இலங்கையிலும் இலட்சக்கணக்கானோர் இந்திய வம்சாவளியினரானார்கள். இவர்கள் இந்தியாவில் தமது உறவினர்களுடனான பூர்வீகத் தொடர்பை இன்னமும் பேணிக் காத்துவருகிறார்கள்.

மக்களுக்கிடையில் வளர்ந்தோங்கிவந்த நட்புறவு, புரிந்துணர்வை வலுப்படுத்துவதில் அரசியல் தலைவர்களும் முக்கிய பங்களிப்பை நல்கினார்கள். இருநாடுகளும் சுதந்திரம் அடைந்ததும் பிரதமர்களாக இருந்த டி. எஸ். சேனநாயக்கா, ஆசிய ஜோதி நேரு ஆகியோர் இரு நாடுகளையும் இணைக்கும் அன்புப்பாலமாக விளங்கினார்கள். தீர்க்க தரிசனமிக்கதலைவர்கள் இரு நாடுகளையும் சேர்ந்த மக்களை ஒன்றுபடுத்தி அத்திவாரமிட்டுச் சென்றார்கள் அதன் விளைவாகவே இருநாடுகளுக்கிடையில் இன்றும் இருதரப்பு அரசியல், பொருளாதார ராஜரீக உறவுகள் தடர்விட்டுப் பிரகாசிக்கின்றன. ஆசிய ஜோதி நேரு தனது பதவிக்காலத்தில் எந்தளவுக்கு இலங்கையுடனான உறவை விருத்தி செய்வதில் அக்கறை எடுத்தாரோ அதிலும் ஒருபடிமேலாக இலங்கை இந்திய உறவை கட்டிவளர்ப்பதில் பிரதமர் காந்தி சிரத்தை காட்டினார்.

மறைந்த பிரதமர் காந்திக்கும், இலங்கைக்கும் இடையில் நீண்ட தொடர்பு இருக்கிறது. அவர் முதற்தடவையாக 1931 ஆம் ஆண்டு தனது பெற்றோர்களுடன் இலங்கை வந்துள்ளார். அப்போது அவருக்கு பன்னிரண்டு வயது. அதன் பின்னர் உலக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விவகாரங்களில் நன்கு அநுபவம் பெற்று 1967 ஆம் ஆண்டு செப்டெம்பர் மாதம் 18 ஆம் திகதி பிரதமராகவே அவர் இலங்கை வந்தார். நான்கு நாட்கள் இலங்கையில் தங்கியிருந்த பிரதமர் காந்தி இருநாடுகளுக்கும் இடையில் வளர்ந்தோங்கி வரும் உறவை மேலும் எந்தளவுக்கு விரிவு படுத்தலாம் என்பதில் கவனம் செலுத்தினர். பிரதமர் அப்போது பத்திரிகையாளர்களிடம் கருத்துத் தொரிவிக்கையில் இலங்கைக்கும் — இந்தியாவுக்கும் இடையில் எவ்விதமான பிரச்சினைகளும் இல்லை என்றார்.

திருமதி காந்தி பதவி ஏற்பதற்கு முன்பாகவே 1964 ஆம் ஆண்டுபதவியிலிருந்து பிரதமர் லால் பகதூர் சாஸ்திரிக்கும் அப்போதைய இலங்கைப் பிரதமர் திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்காவுக்கும் இடையில் இங்குள்ள இந்திய வம்சாவளியினர் விவகாரம் தொடர்பாக உடன்பாடு காணப்பட்டது. அதுவே சிறிமா — சாஸ்திரி ஒப்பந்தம் எனப்பட்டது.

திருமதி காந்தி பதவியேற்ற 1966 ஆம் ஆண்டிலேயே இலங்கையின் பொருளாதார அபிவிருத்திக்கு உதவுவதில் அக்கறை காட்டினர். அந்த ஆண்டு பெப்ரவரி மாதம் இந்தியாவிலிருந்து உணவுப் பொருட்களை இறக்குமதி செய்வதற்காக இரண்டு கோடி ரூபா கடனுதவி வழங்கப்பட்டது. இதைத்தவிர மோட்டார் தொலைத் தொடர்பு உபகரணங்கலை வேறுபொருட்களை கொள்வனவு செய்வதற்காக 1967 ஆம் ஆண்டு ஆகஸ்ட் 16 ஆம் திகதி மேலும் 5 கோடி ருபா கடனுதவி வழங்கப்பட்டது. பிரதமர் காந்தியின் இலங்கை விஜயத்தின் பலாபலனுக பொருளாதார விஸ்தரிப்பு முயற்சியில் ஆக்கறைகொள்ளப்பட்டது. இதன் விளைவாக 1969 ஜனவரி மாதம் இரு நாடுகளுக்கும் இடையில் பொருளாதாரக் கூட்டுக் கமிட்டி ஏற்படுத்தப்பட்டு அதன் முதலாவது கூட்டம் கொழும்பில் இடம் பெற்றது. அப்போதைய இந்திய வர்த்தக அமைச்சர் அதில் கலந்து கொண்டார். இதன் பின்னர் தேயிலை ஏற்றுமதி வர்த்தகத்தை விரிவு படுத்துவதற்காக இந்தியாவின் ஒத்துழைப்புடன் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன.

இவ்வாறு இரு நாடுகளுக்கும் இடையில் அதி உன்னதமான பொருளாதார, வர்த்தக உறவு வலுவடைந்து வரும் காலப்பகுதியிலேயே 1971 ஆம் ஆண்டு எப்ரலில் இலங்கையில் கிளர்ச்சி இடம்பெற்றது. இந்த கிளர்ச்சியை அடக்க உதவுமாறு இலங்கை அரசு விடுத்த வேண்டுகோளைத் தொடர்ந்து இந்திய அரசாங்கமே முதலில் உதவி வழங்கியது. கிளர்ச்சி நடவடிக்கைகளை அடக்குவதற்கு ஹெலிகப்டர்கள் கொடுத்துதவப்பட்டன அதே வேளை 5 கோடி ரூபா 50 லட்சம் டாலர் பெறுமதியான இராணுவ உதவியும் இந்தியாவினுல் இலங்கைக்கு கிடைத்தது கடற்படையினரின் திவிர ரோந்துக்கும் இந்தியா நடவடிக்கை எடுத்திருந்தது. அயல்நாடான இலங்கையின் பாதுகாப்பு விடயத்தில் இந்தியா உதவி வழங்கியது இதுவே முதல் நடவடிக்கையாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிரதமர் காந்தி மீண்டும் ஒரு தடவை 1973 ஆம் ஆண்டு ஏப்ரில் மாதம் இலங்கைக்கு விஜயம் செய்தார். அவரது விஜயத்தின் பலனாக ஐந்து துறைகளில் பொருளாதார கூட்டு முயற்சிகளை மேற்கொள்வதற்கு இணக்கம் காணப்பட்டது. இதைவிட 1973 ஆகஸ்ட் 27 ஆம் திகதி இலங்கைக்கு மேலும் ஐந்து கோடி ரூபா கடனுதவியாக வழங்கவென உடன்படிக்கையொன்றும் கைச்சாத்தானது. 1975 ஆம் ஆண்டு கைத்தொழில் விஞ்ஞான தொழில்நுட்ட முயற்சிகளை விரிவு படுத்தவென மற்றெரு உடன்படிக்கை கைச்சாத்தானது. அதேவேளை இலங்கையில் ஊரத் தொழிற்சாலை யொன்றை நிருமாணிப்பதற்கு பத்துக் கோடி ரூபாவை கடனுதவியாக வழங்குவதெனத் தீர்மானிக்கப்பட்டது. பிரதமர் காந்தி 1973 ஆம் ஆண்டு தனது இலங்கை விஜயத்தின் போது பாராளும்ன்றத்திலும் உரையாற்றினர். அப்போது அவர் குறிப்பிட்ட கருத்து மிகமுக்கியமானது ""பலமான, ஸ்திரமான அயல் நாடுகளே இந்தியாவின் சொத்து"" என்று சுட்டிக்காட்டினர். பின்னர் பத்திரிகையாளர் மாநாட்டில் கச்சதீவு விவகாரம் தொடர்பாக கேள்வி எழுப்பப்பட்டது ஆப்போது பிரதமர் காந்தி "" அது ஒரு கற்பாறை, தீவு கூடஅல்ல"" என்று பதலளித்தார். ஆசியாவில் பல நாடுகளுக்கிடையில் இந்தியா மிகப்பெரும் பொருளாதார ஒத்துழைப்பு நாடாக விளங்குகிறது. நாட்டின் பொருளாதாரத்தை ஸ்திரப்படுத்துவதே சிறந்த பாதுகாப்பு என்றும் அவர் சுட்டிக்காட்டினர்.

கச்சதீவு விவகாரம் இருநாடுகளுக்கும் இடையில் தீர்க்கப்படாது விவகாரமாகவே இருந்து வந்தது. பிரதமர் காந்தியின் காலப்பகுதியிலேயே பேச்சு வார்த்தை மூலம் அதற்கு தீர்வுகாணும் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. 1974 ஆண்டு ஜுன் 26 ஆம் திகதி இதற்கான உடன்படிக்கையும் கைச்சாதிடப்பட்டது.

இலங்கையின் பொருளாதார அபிவிருத்தி முன்னேற்றம் என்பவற்றில் பிரதமர் காந்தி எவ்வளவு தூரம் அக்கறை கொண்டிருந்தார் என்பதற்கு சான்றுகள் ஏராளம் மீண்டும் 1980 ஆம் ஆண்டு பொதுத் தேர்தலின் பின்னர் பதவிக்கு வந்த பிரதமர் காந்தி முன்னைய தொடர்பை இறுக்கம் அடையச் செய்வதிலேயே அக்கறை செலுத்தினர்.

1983 ஆம் ஆண்டு ஜுலையில் இலங்கையில் வன் முறைகள் தலைதூக்கியிருந்த போது பிரதமர் காந்தி மனிதாபிமான ரீதியில் உதவி நல்கினர். ஆயிரக்கணக்கான இலங்கை மக்கள் அகதிகளாக இந்தியா சென்றிருந்தபோது அவர்களுக்கு புகலிடம் அளித்திருந்தார். அது மட்டுமென்றி இலங்கையின் சுதந்திரம், ஒருமைப்பாடு, ஐக்கியத்துக்கு அமைய இலங்கையின் பிரச்சினைக்கு தீர்வுகாண வேண்டும் என்றும் பிரதமர் காந்தி ஆவல் கொண்டிருந்தார், தனது ஆவலை அவர் பலதடவை இலங்கைத் தலைவர்களுடன் வெளிப்படுத்தியுமிருந்தார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்தியாவின் பங்களிப்புடன் இலங்கையின் இனப்பிரச்சினைக் தீர்வுகாண்பதற்கென அவர் இரண்டு தடவை தனது விசேட தூதுவர் ஜி. பார்த்தசாரதியை இங்கு அனுப்பிவைத்திருந்தார். அயல் நாடுகளுடன் சமூக புரிந்துணர்வு, நட்புறவை வலுப்படுத்து வதே பிரதமர் காந்தியின் குறிக்கோளாக இருந்தது? எனவே பிரதமர் காந்தியின் காலப்பகுதியில் இலங்கை — இந்திய நல்லு றவு எந்தளவுக்கு உன்னத நிலையிலிருந்தது என்பதற்கு இதை விட உதாரணம் தேவையா?

## இந்திராவின் பெருமைக்கு காரணங்கள் என்ன

பிரதமர் இந்திரா காந்தி இந்திய மக்களுக்காக மாத்திரம் வாழ்ந்தவர் அல்ல. உலகம் மக்களுக்காகவும் அவர் வாழ்ந்தவர். அவர் வாழ்ந்த குறுகிய காலத்தில் பெறுமதி மிக்க சேவையாற்றி விட்டார். சர்வதேச அரசியலில் பிரதமர் காந்தியின் செல்வாக்கு மிக்க பங்களிப்பை உலகம் இன்றும் போற்றுவதற்கு காரணங்கள் எவையோ இருக்கத்தான் வேண்டும்.

செல்வத்திலும் ஆட்சியிலும் ஊறிய ஒரு குடும்பத்தில் பிர தமர் காந்தி பிறந்ததினால் பணம் கொடுத்து அவரை எவரேமே விலைக்கு வாங்க முடியாதவாறு நேர்மை பெற்று விளங்கினார். பிரதமர் காந்தி பிரிட்டிஷாரின் ஆட்சியால் 270 நாட்களையும் 1980 ஜனதா ஆட்சியின் போது 19 நாட்களையும் சிறையில் கழித் தார் சேவையே பெரிதெனமதித்தார் பிரதமர் காந்தியின் பாட்டனரான மோதிலால் நேருபிரிட்டிஷாரின் ஆட்சியில் பன்னிரண்டாவது செல்வந்தர் என்ற பெருமையை பெற்றவர். ஆகையால் லஞ்சம், ஊழல் பிரதமர் காந்தியிடம் நெருங்கிக்கூட வந்ததில்லை.

உலகத்தரங்கில் இந்தியாவின் அந்தஸ்தை உயர்த பெரிதும் பாடுபாட்டவர் பிரதமர் காந்தி அணுகுண்டை வெடிக்கவைத்து சீனா அமெரிக்காவை அதிர்ச்சிக்குள்ளாகியது. இதைப் போலத் தான் அகிம்சை பேசி ஊருக்கு உபதேசம் செய்து கொண்டி ருந்த இந்தியா 1974 ல் அணுகுண்டை வெடிக்க வைக்க வைத்து உலகை அதிர்ச்சிக்குள்ளாக்கியது. இந்த பெருமை பிரதமர் காந்தியைத் தவிர வேறுயாருக்கு இருக்கமுடியும்.?

ஒரு ரோகிணியையும், பாஸ்கராவையும், ஆரியபட்டாவை யும் வான் வெளிக்கு அனுப்பி வைத்த போது தான் இந்தியாவின் விஞ்ஞானசாதனையைகண்டு உலகும் பிரமித்தது. இந்த சிறப்பு பிரதமர் இந்திராவைத் தவிர வேறு யாரைச் சேரும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சோவியத் யூனியனின் ஒத்துழைப்புடன் இந்தியக் குடிமகனை 1984 ஆம் ஆண்டு விண்வெளிக்கு அனுப்பிவைத்து பிரமிக்கத் தக்க சாதனையையும் நிலைநாட்டி விட்டார் பிரதமர் காந்தி.

உலகில் நாலாவது இராணுவ வலிமைமிக்க நாடு இந்தியா என்ற பெருமையை சுவீகரித்துக் கொடுத்தவர் பிரதமர் காந்தி.

சுதந்திர பலஸ்தினத்தை உருவாக்க வேண்டும் என்பதிலும் அடக்கி ஒடுக்கப்படும் நலிந்த மக்களுக்கு சுதந்திரம் வேண்டும் என்பதிலும் உலக அரங்கில் குரல் எழுப்பியவர் பிரதமர் காந்தி. அடக்கு முறை சர்வாதிகார நடவடிக்கைகளை கண்டித்தவர் பிரதமர் காந்தி.

அணுவாயுத உற்பத்தி, ஆயுதப் போட்டா போட்டி படைக் குறைப்புக்கு குரல் எழுப்பி வல்லரசுகளை விழிக்கச் செய்தவர் காந்தி.

நூற்றியொரு நாடுகளை பிரதிநிதித்துவம் செய்யும் அணி சேரா இயக்கத்தின் தலைமைத்துவப் பொறுப்பை ஏற்றதன் மூலம் இந்தியாவின் சக்திமிக்க பங்களிப்பை உலகறியச் செய்தவர் பிரதமர் காந்தி.

செல்வந்த – வறிய நாடுகளுக்கிடையில் நிலவும் பொருளாதார ஏற்றத்தாழ்வுகள் களையப் பட்டு சமத்துவத்தை உறுதி செய்யுமாறு அடிக்கடி வலியுறுத்தி வந்தவர் பிரதமர் காந்தி.

அண்டை நாடுகளுடனை உறவில் புரிந்துணர்வும், பரஸ்பர ஒத்துழைப்பும் வலுப்படுத்த வேண்டும் என்று ஆவலுடன் செயலாற்றி வந்தவர் பிரதமர் காந்தி.

சர்ச்சைக்குரிய நெருக்கடிகளை தானே முன்வந்து தீர்க்கும் ஆளுமை பெற்றதன் விளைவாக உலக அரங்கில் பாராட்டப்பட்டவர் பிரதமர் காந்தி.

சுதந்திரமான, ஐக்கிய முடைய, பலமுடைய இந்தியாவைக் கட்டியெழுப்ப வேண்டுமென ஓயாது உழைத்தவர் பிரதமர் காநதி. இத்தனை சிறப்புகளும் இருந்ததன் விளைவாகவே அவர் இன்றும் உலக மக்களின் இதயங்களில் வாழ்ந்து கொண்டிருக்கிறார். அந்த சமாதான புறு எம்மை விட்டுப் பிரிந்தாலும் உலக சமுதாயத்தின் விடிவுக்காக ஏற்றிவைத்த சமாதான ஒளி இன்னும் மறையவில்லை. பிரதமர் காந்தி இந் நூற்றாண்டின் இந்தியாவின் இணை யற்ற தலைவர். சர்வதேச அரங்கில் சக்தி மிக்கத் தலைவர் என்பதில் எள்ளளவும் சந்தேகமே இல்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்தியாவின் எழுச்சிக்கும், பெருமைக்கும் காரணமான பாரதத் திருமகள் தனது உடம்பில் உள்ள ஒவ்வொரு துளி இரத்தமும் தேச சேவைக்கே பயன்பட வேண்டும் என்று விரும்பினார். தனது வாழ்நாளில் பெரும்பகுதியை தேச சேவைக்கு அர்ப்பணித்த இந்தத்திருமகள் **1984** ஆம் ஆண்டு அக்டோபர் **31** ஆம் திகதி மறைந்தார். இமயத்துடன் சங்கமமாகி உலக வரலாறுபடைத்துவிட்ட பிரதமர் காந்தி இந்திய மக்களின் இதயங்களிலும் உலக சமுதாயத்தினரின் நினைவிலும் வாழ்ந்து கொண்டே இருக்கிறார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



இந்திரா சிறுமியாக இருந்தபோது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



திருமணத்திற்குமுன் இந்திராவின் இளமைத் தோற்றம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



அன்னையின் சிதைக்கு தனயன் ராஜிவ்காந்தி தீ மூட்டப் புறப்படுகிறார்



இந்திராவின் அஸ்தி கொண்ட கலசத்தை பிரதமர் ராஜீவ் ஏந்திச் செல்கிறார்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org






மரணச்சடங்கின் இறுதி ஊர்வலத்தில் முப்படைத் தளபதிகள் இராணுவ வீரர்கள் அணிவகுத்துச் செல்கிறார்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




மீளாத்துயில் கொண்டுவிட்ட பாரத ரத்ன இந்திரா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




ஒரு யுகத்தலைவியான இந்திரா அக்கினியுடன் சங்கமமாகிறார்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



கணவர் பெரோஸ் காந்தியுடன் திருமணச்சடங்கின் போது இந்திரா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





இந்திராவின் குடும்பம் இது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



இலங்கை ஜனாதிபதி தம்பதிகள் இந்தியா சென்றிருந்தபோது இந்திரா அவர்களுடன் காணப்படுகிறார்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





புதுடில்லி அணிசேரா மாநாட்டின்போது தலைமைத்துவப் பொறுப்பை ஏற்கிருர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



கிரேக்க விஜயத்தின் போது பிரதமர் பாப்ன்டிரியோவுடன் இந்திரா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



சீனத்தலைவர் உறீவாங்குவாவுடன் இந்திரா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



வெள்ளை மாளிகை வரவேற்பில் ஜனாதிபதி றேகனுடன் இந்திரா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





ஐ. நா. செயலாளர் நாயகம் சேவியர் பெரஸ் டி குயிலரிடமிருந்து
குடிசனத்தொகை கட்டுப்பாட்டுக்கான விருது தை இந்திரா பெறுகிறார்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




புதுடில்லி காமன்வெல்த் மாநாட்டில் தலைவர்களுடன் இந்திரா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



புதுடில்லி செங்கோட்டையில் அணிவகுப்பு மரியாதையை இந்திரா ஏற்கிறார்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




பாராளுமன்ற கூட்டத்தொடருக்கு இந்திரா செல்கிறார்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



காமன் வெல்த் செயலாளர் நாயகம் ஸ்ரீதத் ரம்பால் சகிதம் பத்திரிகையாளர் மாநாட்டில் இந்திரா உரையாற்றுகிறார்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



சைப்பிரஸ் பிரதமர் கிப்ரியானோவுடன் இந்திரா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



காமன் வெல்த் செயலாளர் நாயகம் ஸ்ரீதத் ரம்பாலுடன் முக்கிய விவகாரம் குறித்து இந்திரா உரையாடுகிறார்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



எகிப்திய ஜனாதிபதி ஹொஸ்னி முபாரக்குடன் இந்திரா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



அமெரிக்க விஜயத்தின் போது ஜனாதிபதி றேகனுடன் இந்திரா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



பிரதமராக இந்திரா சத்தியப்பிரமாணம் செய்துகொள்கிறார்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



சோவியத் யூனியன் சென்றிருந்த போது மறைந்த தலைவர் செர்னன்கோவுடன் இந்திரா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



காமன் வெல்த் மாநாட்டில் எலிசபெத் மகாராணியாருடனும், இதர தலைவர்களுடனும் இந்திரா.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org






தகவல் ஒலிபரப்புத்துறை அமைச்சராக சத்தியப்பிரமாணம் செய்துகொள்கிறார்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



விண்வெளி சென்றுவந்த இந்தியக் குடிமகன் ராகேஷ் சர்மாவுடன் இந்திரா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



புதல்வர்களாக மறைந்த சஞ்சய்காந்தி இன்றைய பிரதமர் ராஜீவ்காந்தியுடன்
பிரதமர் இந்திரா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



சிம்லா உடன்படிக்கையில் மறைந்த பாகிஸ்தான் பிரதமருடன் இந்திரா கைச்சாத்திடுகிறார்



பிரிட்டிஷ் பிரதமர் மார்கிரட் தட்சருடன் இந்திரா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




ஜேர்மன் சமஷ்டிக் குடியரசின் தலைவர் ஹொனேக்கருடன் இந்திரா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



மொரிஷியஸ் பிரதமர் அனிருட் ஜகந்நாத் தம்பதிகளை காந்தி வரவேற்கிறார்



நேபாள மன்னர் பிரேந்திராவுடன் பிரதமர் காந்தி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



வங்கதேச ஜனாதிபதி லெப் ஜெனரல் எர்ஷாடை

இந்திரா வரவேற்கிறார்



ஆனந்த பவனத்தில் தந்தையுடன் இந்திரா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




இந்தியாவின் புதிய தயாரிப்பான டாங்கியின் மாதிரி அமைப்பை இந்திரா ஏந்தியுள்ளார்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நூலாசிரியர்



நூலசிரியர் திரு. கண. சுபாஷ் சந்திரபோஸ். இலங்கையின் முன்னணித் தமிழ்ப் பத்திரிகையான வீரகேசரியில் சிரேஷ்ட உதவியாசிரியராக இருந்து வருகிறார். ஆரம்ப காலத்தில் தினபதி, சிந்தாமணி பத்திரிகைகளின் அரசியல் நிருபராக இருந்துள்ளார்.

கடந்த ஐந்தாண்டு காலமாக வீரகேசரியில் வெளிநாட்டு அரசியல் கட்டுரைகளை மிக ஆர்வமுடன் ஆராய்ச்சிபூர்வமாக எழுதி வந்துள்ளார். ஆசிய — ஆபிரிக்க, லத்தின் அமெரிக்க ஐரோப்பிய அரசியல் நிகழ்வுகள் குறித்து இதுவரை இருநூறுக்கும் அதிகமான கட்டுரைகளை வீரகேசரியில் எழுதியிருக்கின்றார்.

சுபாஷ், நேதாஜி, தெய்வப்பிரியன் என்ற பெயர்களில் பத்திரிகையில் இவரது கட்டுரைகள் வெளியாகியுள்ளன. இவர் வானொலி நிகழ்ச்சிகளுக்கும் அதிகம் எழுதியுள்ளார். அண்மைக் காலமாக தொலைக்காட்சியிலும் வெளிநாட்டுச் செய்தி விமர்சன நிகழ்ச்சியில் பங்குபற்றி வருகின்றார்.

வெளிநாட்டு அரசியல் விமர்சனத்துறையில் மிகத் திறமையான முறையில் முன்னேறிவரும் இந்த இளம் நூலாசிரியர் இந்தியப்பிரதமர் ராஜீவ் காந்தியின் அயல்நாட்டுக்கொள்கையும் இந்தியராஜதந்திரமும் என்ற நூலை எழுதும் முயற்சியில் ஈடுபட்டு வருகிறார்.

பேராசிரியர், சட்டக் கலாநிதி
**எச். டபிள்யூ. தம்பையா Q. C.**
முன்னாள் நீதி அரசர்
சட்ட ஆணைக்குழு
பதில் தலைவர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org